REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 பெப்ரவரி 17 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN තිනකරන්

89 1932 - 2021

வரு. 90 இல. 41 | Thursday 17, February, 2022 | 16 பக்கங்கள் | 30/-

SLT-Mobitel Mobile கட்டணத்தை Online ஊடாக செலுத்தி 5GB இலவசமாக பெறுங்கள்!
Web portal | Selfcare App
www.sltmobitel.lk PAY BILL
SLTMOBITEL



APIIT Edu Expo Jaffna
புலமைப்பரிசில்களும் உண்டு
18th & 19th February 2022
9.00 am - 7.00 pm
@ Cargills Square
உங்கள் எதிர்கால வண்ணத்தினை APIIT உடன் தேர்ந்தெடுங்கள்
AWARDED BY STAFFORDSHIRE UNIVERSITY | NCUK THE UNIVERSITY CONSORTIUM
Colombo 0768 031 576 | Kandy 0763 663 115
APIIT Colombo Campus, No 388, Union Place, Colombo 2. | APIIT Kandy Campus, No 542, Peradeniya Road, Kandy.
A·P·I·I·T Inspire love for learning

# சடலங்கள் மீதான கட்டாய PCR பரிசோதனை நீக்கம்

- சட்ட மருத்துவ அதிகாரியின் தேவைக்கேற்ப தீர்மானம்
- சுகாதார அமைச்சு புதிய வழிகாட்டல் வெளியீடு





**லோரன்ஸ் செல்வநாயகம்**

நபரொருவர் மரணிக்கும்போது மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனை தொடர்பில் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்தினால் புதிய வழிகாட்டல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. 06

## தேசிய கைத்தொழில் வல்லுநர்களுக்கு ஜனாதிபதியிடமிருந்து விருது



"நாட்டுக்கு புத்துயிரளிக்கும் தொழிற்றுறை மறுமலர்ச்சி" என்ற தொனிப்பொருளில், கைத்தொழில் துறைசார் வல்லுநர்களை கௌரவிக்கும் தேசிய கைத்தொழில் சிறப்பு விருதுவிழா, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் (15), பத்தரமுல்ல வோட்டர்ஸ் எஜ் ஹோட்டலில் நடைபெற்றது.

சிறப்புமிக்க சிறு, நடுத்தர மற்றும் பாரிய கைத்தொழில் உற்பத்திகள் மற்றும் சிறப்புமிக்க இயந்திர உற்பத்திகள் போன்ற துறைகளைச் சேர்ந்த வல்லுநர்கள், இந்த விருதுவிழாவின் 06

ஓமந்தை - அனுராதபுரம் இடையிலான

## புகையிரத சேவைகள் 06 மாதங்கள் இடைநிறுத்தம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அநுராதபுரம் - ஓமந்தை ரயில் பாதை புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் மார்ச் மாதம் 05 ஆம் திகதி முதல் ஆறு மாத காலத்துக்கு அப்பகுதி மூடவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் ரயில்வே பொதுமுகாமையாளர் 06

சமுதித்த இல்லம் மீதான தாக்குதல்

## 60 பேர் கொண்ட 09 விசேட பொலிஸ் குழுக்கள் தனித்தனி விசாரணை



சமுதித்த இல்லம் மீதான தாக்குதல் தொடர்பில் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் உள்ளிட்ட 60 பேர் அடங்கிய 09 விசேட விசாரணை குழுக்கள் தொடர்ந்தும் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் 06

## பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு 11 பில்லியன் ரூபா நட்டம்

தற்போதைய சூழலில் இம் மாதத்தில் சுமார் 11 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படலாமென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 06

காசல்ரீ, மவுசாக்கலை நீர்த்தேக்கங்களின்

## நீர் மட்டம் மேலும் வீழ்ச்சி 300 மெ.வோ மின்சாரம் இழப்பு

03



## சஹ்ரானின் மனைவியிடம் 06 மணிநேர விசாரணை

03

நீதிமன்ற அனுமதியுடன் CID பதிவு

## நீராடச் சென்ற இரு மாணவிகள் பலி



குருநாகல், வில்பாவ குளத்தில் நீராடச் சென்ற இரு பாடசாலை மாணவிகள் நீரில் மூழ்கி பலியாகியுள்ளனர்.

உயிரிழந்தவர்கள் குருநாகல் பகுதியைச் சேர்ந்த 13 மற்றும் 14 வயதுடையவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் (15) மாலை வில்பாவ குளத்தில் நான்கு 06

## 'ஒரேநாடு – ஒரே சட்டம்' செயலணி முக்கிய அமைச்சர்களுடன் சந்திப்பு



"ஒரே நாடு – ஒரே சட்டம்" என்ற எண்ணக்கருவை அடைவதற்காக, ஜனாதிபதி செயலணியினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ள யோசனைப் பத்திரத்தில் 06

## கிழக்கில் தனித்து போட்டியிட முடிவு

ஐ.ம.சக்தி செயலாளர் ரஞ்சித் மத்தும



**கல்முனை விசேட நிருபர்**

எந்தவொரு தேர்தலாயினும் எதிர்வரும் காலங்களில் ஐக்கிய மக்கள் சக்தி கிழக்கு மாகாணத்தில் தனித்தே போட்டியிடுமென்று கட்சியின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவாளர்களுடனான விசேட கலந்துரையாடல் (15) கல்முனை பரடைஸ் 06

### விக்கல் வீராச்சாமி



அண்ணே, சைக்கிளில பயணிக்கிறத அரசாங்கம் ஊக்குவிக்க போறதா ஊடகங்களில செய்தி வந்திருக்கு, பாத்தீங்களா...

பாத்தேன், நல்ல விஷயம், ஆனா, யார் விலை கூடின சைக்கிள்ல போறது எண்டு எங்கட ஆக்கள் சண்டை பிடிக்காம இருந்தா அது பெரிய விஷயம்...!!!

TRIPLE BLASTER இப்போது புதுப்பொழிவுடன்!
Dialog முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு
எந்தவொரு வலையமைப்பிற்கும்* 1,000 நிமிடங்கள் 1,000 SMS
Anytime Data 1.5GB
மாதத்திற்கு ரூ.498/- (மேலதிக வரிகள் இல்லை)
செயற்படுத்தல் ரூ. 498/- இனை ரீலோட் செய்வதன் மூலம் அல்லது MyDialog App மூலம்
*உள்நாட்டு அழைப்புகளுக்கு மட்டுமே I நிபந்தனைகளுக்கு உட்பட்டது TRC/D/PRO/21/09
Dialog எதிர்காலம் இன்றே.

89 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# சர்வதேச செய்திகள்

# உக்ரைனின் மீது ரஷ்யா தாக்குதல் தொடுப்பதற்கு தொடர்ந்தும் வாய்ப்பு

## அமெரிக்க ஜனாதிபதி பைடன் எச்சரிக்கை



உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் தொடுப்பதற்கு இன்னும் அதிக வாய்ப்பு இருப்பதாகவும் இதனால் மனித இழப்புகள் அதிகம் ஏற்படக்கூடும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரித்துள்ளார்.

அவ்வாறான நடவடிக்கைக்கு தீர்க்கமான முறையில் பதலளிக்க அமெரிக்கா தயாராக உள்ளது என்று தொலைக்காட்சியில் தேசிய அளவில் உரையாற்றிய பைடன் குறிப்பிட்டார்.

ரஷ்யா தற்போது உக்ரைனுடனான எல்லையில் சுமார் 150,000 துருப்புகளை குவித்திருப்பதாகவும் அமெரிக்க ஜனாதிபதி குறிப்பிட்டார்.

உக்ரைன் எல்லையில் இருந்து சில துருப்பினர் வாபஸ் பெறப்பட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் அறிவித்திருந்தார். எனினும் இது உறுதி செய்யப்படவில்லை என்று பைடன் கூறினார்.

“(ரஷ்ய படையினர் வெளியேறுவது) நல்லதாக இருக்கும். ஆனால் அது இன்னும் உறுதி செய்யப்படவில்லை. ரஷ்ய இராணுவப் பிரிவுகள் தமது முகாம்களுக்கு திரும்புவது இன்னும் உறுதி செய்யப்படவில்லை” என்று அமெரிக்க ஜனாதிபதி கூறினார்.

“உண்மையில், அவர்கள் தொடர்ந்து அச்சுறுத்தும் நிலை ஒன்றில் இருப்பதாக எமது ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்” என்று பைடன் தெரிவித்தார்.

உக்ரைன் பாதுகாப்பு அமைச்சு மற்றும் இரு வங்கிகளின் இணையதளங்கள் மீது சைபர் தாக்குதல் இடம்பெற்றதாக அந்த நாடு கடந்த செவ்வாயன்று தெரிவித்தது. இதனால் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றி உறுதி செய்யப்படாதபோதும் அது ரஷ்யா மீது குற்றம்சாட்டுகிறது.

உக்ரைன் மீது முழு அளவிலான படையெடுப்பு ஒன்றுக்கு பதில் சைபர் தாக்குதல் போன்ற பாதிப்புகளை செய்ய ரஷ்ய முயல்வதாக கவலை இருந்து வருகிறது. அவ்வாறான நடவடிக்கைகளுக்கு பதில் கொடுக்க அமெரிக்கா தயாராக இருப்பதாக ஜோ பைடன் தெரிவித்தார்.

ரஷ்யாவின் பாதுகாப்பு பற்றிய கவலைக்கு விடை காணப்படும் என்றும் அது பற்றி தீவிரமாக எடுத்துக்கொள்வோம் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் அறிவித்த நிலையிலேயே பைடனின் உரை வந்துள்ளது.

ஆக்கிரமிப்புத் தொடுக்கும் திட்டத்தை புட்டின் தொடர்ந்து மறுத்து வருகிறார். ஐரோப்பாவில் மற்றொரு போரை விரும்பவில்லை என்று அவர் தெரிவிக்கிறார். என்றாலும் கடந்த நவம்பர் மாதம் தொடக்கம் பிராந்தியத்தில் பதற்ற சூழல் நீடித்து வருகிறது.

உக்ரைன் மீது ரஷ்யா நேற்று புதன்கிழமை தாக்குதல் நடத்தும் என்று ஆரம்பத்தில் அமெரிக்க உளவுத் தகவல்கள் கூறின. அன்றைய தினம் ஒற்றுமையின் நாளாக உக்ரைன் ஜனாதிபதி வொலொடிமிர் செலன்ஸ் அறிவித்தார். நாட்டுமக்களை தேசியக் கொடியை ஏற்றும்படியும் உக்ரைன் தேசியக் கொடி நிறமான நீலம் மற்றும் மஞ்சள் ரிப்பன்களை அணியும்படியும் அவர் நாட்டு மக்களை கேட்டுக்கொண்டார்.

முன்னாள் சோவியட் குடியரசு ஒன்றான உக்ரைன் ரஷ்யாவுடன் ஆழமான கலாசார மற்றும் வரலாற்று உறவைக் கொண்டுள்ளது.

அந்த நாடு மேற்கத்தேய இராணுவக் கூட்டணியான நேட்டோவில் இணையாமல் இருப்பதை உறுதி செய்ய ரஷ்யா விரும்புகிறது. நேட்டோவின் விரிவாக்கம் ரஷ்யாவுக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்று அது குறிப்பிடுகிறது. எனினும் உக்ரைனை நேட்டோவில் இணைக்கக் கூடாது என்று ரஷ்யாவின் கோரிக்கையை அந்த அமைப்பு நிராகரிக்கிறது.

ரஷ்ய அரசினால் முன்மொழியப்பட்ட உடன்படிக்கை தொடர்ந்து இராஜதந்திர பேச்சு வார்த்தைக்கு உட்பட்டது என்று பைடன் கூறுகிறார்.

உக்ரைன் மீது ரஷ்யா ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு பதிலடியாக ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகள் விதித்தால், அதனால், அமெரிக்காவில் எரிபொருள் விநியோகத்தில் சிக்கல் ஏற்பட்டு, அமெரிக்கப் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்பதையும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறியுள்ளார்.

“ஜனநாயகத்துக்கும், விடுதலைக்கும் பாதுகாப்பாக நிற்கும்போது அதற்கு ஒரு விலை தர வேண்டியிருக்கும் என்பதை அமெரிக்க மக்கள் உணராதவர்கள் அல்ல. இது வழியில்லாமல் நடக்கும் என்று நான் பாசாங்கு செய்யமாட்டேன்,” என்றும் பைடன் கூறியுள்ளார்.

அமெரிக்க நிர்வாகம் தற்போது விநியோக பிரச்சினை வராமல் இருக்க ஆற்றல் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதி செய்பவர்கள் உடன் வருங்கால திட்டத்திற்காக வேலை செய்து கொண்டிருக்கிறது என்று கூறினார்.

மேலும் பைடன் கூறுகையில், உக்ரைன் ஆக்கிரமிப்பு நடந்தால் ஐரோப்பாவுக்கான ரஷ்யாவின் நோர்ட்ஸ்ட்ரீம் 2 இயற்கை எரிவாயு குழாய் திட்டம் நடக்காது என்றும் கூறினார். “ரஷ்ய குடிமக்களுக்கு நான் கூற விரும்புவது: நீங்கள் எங்கள் எதிரிகள் அல்ல, அதே சமயத்தில் ஒரு அழிவு நிறைந்த போரை நீங்கள் உக்ரைனில் நிகழ்த்த விரும்பமாட்டீர்கள் என்று நம்புகிறேன்” என்று தெரிவித்துள்ளார் பைடன்.

## கனடா கரைக்கு அப்பால் படகு மூழ்கி 10 பேர் பலி



கனடாவின் கிழக்குக் கடற்கரைக்கு அப்பால் ஸ்பெயின் மீன்பிடிப் படகு ஒன்று மூழ்கியதில் குறைந்தது 10 பேர் பலியாகி இருப்பதோடு மேலும் 11 பேர் காணாமல்போயுள்ளனர்.

படகில் இருந்த மூவர் மீட்கப்பட்டிருப்பதோடு உயிர் தப்பியோரைத் தேடி தொடர்ந்து மீட்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த மீன்பிடிப் படகில் 16 ஸ்பெயின் நாட்டவருடன் பெரு மற்றும் கானா நாட்டவர் உட்பட 24 பேர் இருந்ததாக ஸ்பெயின் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கரையில் இருந்து 450 கிலோமீற்றர் தொலைவில் இந்தப் படகில் இருந்து உதவி கோரி இரு முறை அழைப்பு கிடைத்திருப்பதாக ஸ்பெயின் கடல் ஆராய்ச்சி மற்றும் மீட்பு நிறுவனம் குறிப்பிட்டது.

கனடா மீட்பு நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்திருப்பதோடு மீட்புக் கப்பல் மற்றும் ஹெலிகொப்டர் மற்றும் பிராந்தியத்தல் உள்ள மீன்பிடிப்படகுகள் இந்த மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

## நியூசிலாந்தில் கொரோனா தொற்று சாதனை உச்சம்



நியூசிலாந்தில் கொரோனா தொற்று நேற்று சாதனை அளவுக்கு உச்சத்தை தொட்டுள்ளது.

இந்தப் பெருந்தொற்று ஆரம்பித்தது தொடக்கம் நேற்று அதிக பட்சமாக 1,160 புதிய தொற்று சம்பவங்கள் பதிவானதாக சுகாதார அதிகாரிகள் அறிவித்துள்ளனர். ஒமிக்ரோன் வைரஸ் திரிபு அங்கு வேகமாக பரவுவதற்கு காரணமாகக் கூறப்படுகிறது. எனினும் ஐந்து மில்லியன் மக்கள் தொகை கொண்ட அந்த நாட்டில் இதுவரை 53 உயிரிழப்புகளே பதிவாகி உள்ளன.

கொவிட் தொடர்பான கட்டுப்பாடுகள் மற்றும் அரசின் தடுப்பூசித் திட்டத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்று வருகின்றன. கனடாவில் இடம்பெற்று வரும் லொரி ஓட்டுநர்களின் ஆர்ப்பாட்டத்தில் ஈர்க்கப்பட்டே நியூசிலாந்திலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

தலைநகர் வெலிங்டனின் பாராளுமன்ற முற்றவெளியில் ஆர்ப்பாட்டக்காரர்கள் முகாமிட்டுள்ளனர்.

## கொங்கோ ஆயுதக் குழு தாக்குதல்: 18 பேர் பலி



வட கிழக்குக் கொங்கோவின் தொலைதூரப் பகுதியில் கொடிய இன ஆயுதக் குழு ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய தாக்குதலில் 18 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கத்திகள், துப்பாக்கிகள் மற்றும் அம்புகளைப் பயன்படுத்தி இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் ஏழு சிறுவர்கள் மற்றும் ஆறு பெண்களும் கொல்லப்பட்டிருப்பதாக சிவில் பாதுகாப்புகுழுக்களின்ரொபர்ட்பசிலோகோ தெரிவித்துள்ளார்.

லிண்டு இனக் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் மற்றும் சமயக் குழு ஒன்றே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது. இங்கு லென்டு மற்றும் ஹெமா இனக் குழுக்களுக்கு இடையிலான மோதலில் 1999 மற்றும் 2003 ஆம் ஆண்டுக்கு இடையே கொல்லப்பட்டுள்ளனர். இதனால் ஐரோப்பிய அமைதிகாக்கும் படை இந்தப் பிரச்சினையில் தலையிட்டமை குறிப்பிடத்தக்கது.

எனினும் 2017 ஆம் ஆண்டு லிண்டு ஆயுதக் குழுவின் தோற்றத்திற்குப் பின் மீண்டும் வன்முறைகள் வெடித்துள்ளன. இந்தக் குழுவின் தாக்குதல்களில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டிருப்பதோடு ஒரு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

## சொகுசு கப்பலுக்கு கட்டுப்பாடு தளர்வு



அமெரிக்காவில் சொகுசுக் கப்பல்களில் செல்வதற்கு எதிரான கட்டுப்பாடுகளை அந்நாட்டின் நோய்த்தடுப்பு, கட்டுப்பாட்டு நிலையம் தளர்த்தியுள்ளது. சுமார் 7 வாரங்களுக்கு முன்னதாகச் சொகுசுக் கப்பல்களில் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை அதிகரித்திருந்ததால் அதற்கான எச்சரிக்கை நிலை உயர்த்தப்பட்டது. அதன் காரணமாகச் சொகுசுக் கப்பல் நிறுவனங்கள் அவற்றின் பயணங்களை ரத்து செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. சூழ்நிலை மேம்பட்டுள்ளதால் எச்சரிக்கை நிலை ஒருபடி குறைக்கப்பட்டது. இருப்பினும் தடுப்பூசி போட்டுக்கொள்ளாதோர் சொகுசுக் கப்பல்களைத் தவிர்க்கும்படி தொடர்ந்து பரிந்துரைக்கப்படுகிறது.

## தொடர்ந்து 14 மாதங்களாக துருக்கி ஆடவர் கொவிட் தொற்றால் பாதிப்பு



துருக்கியைச் சேர்ந்த ஆடவர் ஒருவர் தொடர்ந்து 14 மாதங்களாகக் கொவிட்–19 நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ந்து 78 பரிசோதனைகளில் அவருக்கு நோய்த்தொற்று உறுதியானது. ஏற்கனவே இரத்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள அவர் நோய் இருப்பது தெரிந்ததும் தாம் இறந்துவிடப்போவதாக நினைத்தார்.

56 வயது முஸாபர் கயாஸான் மிக நீண்ட காலம் கொவிட்–19 தொற்றால் பாதிக்கப்பட்டவராக பதிவாகியுள்ளார். புற்றுநோயால் வலுவிழந்து போயிருக்கும் அவரது எதிர்ப்புச் சக்தி அதற்குக் காரணமாக இருக்கலாம் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

2020 நவம்பர் முதல் மருத்துவமனைக்குச் செல்வதும் திரும்புவதுமாக இருக்கும் கயாஸான் மனத் திடத்துடன் இருக்கிறார். கடந்த வாரம் அவருக்குத் தொற்று மீண்டும் உறுதியானது.

அவரது பிரத்தியேகமான கொவிட் நிலை காரணமாக தனது பேரப் பிள்ளைகளை அவரால் ஜன்னல் வழியாக மாத்திரமே பார்க்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தனது குடும்பத்தை தனிப்பட்ட முறையில் பார்ப்பதே தனது பெரும் எதிர்பார்ப்பாக இருப்பதாக கயாஸான் தெரிவித்துள்ளார்.

'எனது அன்புக்குரியவர்களை தழுவிக்கொள்வதைத் தவிர இங்கு எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அது மிகவும் கடினமாக உள்ளது' என்று அவர் தெரிவித்துள்ளார்.

தனது பிரத்தியேக நிலைக்கு தீர்வு ஒன்றை தரும்படி துருக்கி நிர்வாகத்தை அவர் கேட்டிருப்பதாக டெய்லி சபா பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. இதன்மூலம் நாட்டின் விதிகளில் இருந்து தமக்கு விலக்குக் கிடைக்கும் என்று அவர் எதிர்பார்த்துள்ளார்.

## ரஷ்ய எதிர்க்கட்சி தலைவர் நவல்னி மீது புதிய வழக்கு



சிறை வைக்கப்பட்டுள்ள ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவல்னி மீதான புதிய வழக்கு விசாரணை அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள மொஸ்கோவின் கிழக்கில் உள்ள உச்ச பாதுகாப்புக் கொண்ட சிறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நவல்னி மீது புதிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது. விசம் ஊட்டப்பட்ட தாக்குதலில் இருந்து உயிர் தப்பிய அவர் ஏற்கனவே கடந்த ஓர் ஆண்டு காலமாக சிறை அனுபவித்து வருகிறார்.

அவர் தற்போது இரண்டரை ஆண்டுகள் சிறைத் தண்டனையை அனுபவித்துள்ளார். இந்நிலையில் இந்த புதிய வழக்கு விசாரணை அவரது சிறைத் தண்டனையை பத்து ஆண்டுகளுக்கு மேல் நீடிக்க வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த புதிய குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு உரியது என்று குறிப்பிட்டிருக்கும் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளின்கள், அதிகாரிகளின் ஊழல்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் நவல்னி மற்றும் அவரது சகாக்களின் முயற்சி காரணமாக அவர் இலக்கு வைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார். அவரை விடுவிக்கும்படி ரஷ்ய நிர்வாகத்தை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.



## போதைக் கடத்தல்: ஹொன்டுராஸ் முன்னாள் ஜனாதிபதி கைதானார்

போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டு ஒன்றில் ஹொன்டுராஸ் முன்னாள் ஜனாதிபதி ஜுவான் ஓர்லாண்டோ ஹெர்னாண்டஸ் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் தப்பிச் செல்வதைத் தவிர்ப்பதற்கு அவரை நாடுகடத்த அமெரிக்கா கோரி சில மணி நேரங்களில் தலைநகர் டகுசிகல்பாவில் இருக்கும் அவரது வீட்டில் பொலிஸார் நிலைநிறுத்தப்பட்டனர்.

பிடியாணை பிறப்பிக்கப்பட்டதை அடுத்தே பொலிஸார் அங்கு சென்றனர். சரணடைந்த அவர் கைவிலங்கிடப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டார். 2014 தொடக்கம் கடந்த ஜனவரி மாதம் வரை ஹொன்டுராஸில் ஆட்சியில் இருந்த ஹெர்னாண்டஸ் தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார்.

தனது இளைய சகோதரர் உட்பட போதைக் கடத்தல் கும்பலுடன் தொடர்புபட்டதாக அவர் மீது குற்றம்சாட்டப்படுகிறது. அவரது இளைய சகோதரரான டோர்னி ஹெர்னாண்டஸுக்கு கடந்த ஆண்டு அமெரிக்காவில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. தென் அமெரிக்காவில் இருந்து அமெரிக்காவுக்கு போதை கடத்துவதன் முக்கிய பயணப் பாதையாக ஹொன்டுராஸ் பல ஆண்டுகளாக இருந்து வருகிறது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 பெப்ரவரி 17 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN



**தொழுகை நேரம்**

சுபஹ் - 05.11
ளுஹர் - 12.26
அஸர் - 03.47
மஃரிப் - 06.22
இஷா - 07.33

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் மாசி 5

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

மேஷம் - செலவு
ரிஷபம் - பாராட்டு
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - கோபம்
கன்னி - முயற்சி
துலாம் - நன்மை
விருச்சிகம் - நிறைவு
தனுசு - வெற்றி
மகரம் - பொறுமை
கும்பம் - மறதி
மீனம் - சுகம்

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

## கங்காராம பெரஹராவில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ



கங்காராம பெரஹரா நிகழ்வில் நேற்று முன்தினம் நடைபெற்ற பெரஹரா வீதி உலாவின் போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பெரஹராவில் செல்லும் யானை மீது பௌத்த சின்னத்தை (கரண்டுவ)வை வைக்கும் போது பிடிக்கப்பட்ட படம்.

கொரோனா வைரஸ் தொற்று

## தீவிர சிகிச்சைப் பிரிவு, ஒட்சிசன் தேவையுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரிப்பு

*டாக்டர் அன்வர் ஹம்தானி*

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வைத்தியசாலைகளில் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெறும் கொரோனா தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப சேவைப் பணிப்பாளர் டாக்டர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஒட்சிசன் தேவைப்படும் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாகவும் அந்த எண்ணிக்கை தற்போது நூற்றுக்குப் பன்னிரெண்டு வீதமாகக் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அன்றாடம் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாகவும் தெரிவித்துள்ள அவர், அந்த எண்ணிக்கை நூற்றுக்குப் பதினேழு வீதமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாள்தோறும் கொரோனா வைரஸ் தொற்று கரணமாக மரணிப்போரின் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர்களில் நூற்றுக்கு 60 வீதமானோர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்களென்றும் அவர் தெரிவித்துள்ளார். கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள தடுப்பூசிகளை முறையாகப் பெற்றுக்கொள்வதில் மக்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

காசல்ரீ, மவுசாக்கலை நீர்த்தேக்கங்களின்

## நீர் மட்டம் மேலும் வீழ்ச்சி; 300 மெ.வோ மின்சாரம் இழப்பு



மத்திய மலையகத்தில் வரட்சியான காலநிலை காரணமாக நீர் மட்டம் மேலும் வீழ்ச்சியடைந்துள்ளதாக நீர் மின் உற்பத்திக்கான காசல்ரீ மற்றும் மவுசாக்கலை நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இரண்டு மின் உற்பத்தி நிலையங்களும் சுமார் 300 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்புக்கு சேர்க்கின்றன.

காசல்ரீ நீர்த்தேக்க அணை 155 அடி உயரம் கொண்டதுடன் அதன் நீர் மட்டம் 118 அடியாகக் குறைந்துள்ளது. கடந்த 15ஆம் திகதி காலை 6 மணியளவில் மவுசாக்கலை நீர்த்தேக்க அணையின் உயரம் 120 அடியாக இருப்பதுடன் நீர்மட்டம் 75 அடியாகக் குறைந்துள்ளதாக மவுசாக்கலை நீர்த்தேக்கத்துக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

மருந்து, அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள்

## இந்தியா, சீனாவிடமிருந்து பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் அடுத்த இரண்டு காலாண்டுகளுக்கு தேவையான மருந்து வகைகள் மற்றும் அத்தியாவசிய மருத்துவ உபகரண பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்பதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இந்தியாவினால் நன்கொடையாக 100,000 அன்டிஜன் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். 110 மில்லியன் ரூபா பெறுமதியான அன்டிஜன் உபகரணங்கள் இவ்வாறு இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே சுகாதாரத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் இதனை கையளித்தார்.



தட்டுப்பாடின்றி மருந்துகளை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக இந்தியாவிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்புக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். அடுத்த இரண்டு காலாண்டுகளுக்கு தேவையான மருந்து வகைகள் மற்றும் அத்தியாவசிய மருத்துவ உபகரண பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

குறிப்பாக நாட்டு மக்களுக்கு தேவையான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை எவ்வித தட்டுப்பாடுமின்றி வழங்க எதிர்பார்த்துள்ளதோடு, இதற்காக அரசாங்கம் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## சஹ்ரானின் மனைவியிடம் 06 மணிநேர விசாரணை

நீதிமன்ற அனுமதியுடன் CID பதிவு

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹாஷிமின் மனைவியிடம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் 6 மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள சஹ்ரான் ஹாஷிமின் மனைவி தற்போது வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், வெலிக்கடை சிறைச்சாலைக்கு நேற்று முன்தினம் சென்ற குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## முதல் தடவையாக கிராமங்களுக்கான வரவு செலவுத் திட்டம் இம்முறை அரசாங்கத்தினால் சமர்ப்பிப்பு

*அமைச்சர் தினேஷ் குணவர்தன*



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் முதல் தடவையாக கிராமங்களை முன்னேற்றுவதற்காக அரச திணைக்களங்கள் உள்ளிட்ட நிறுவனங்களின் நிதியின் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி உதவிபெறுவோருக்கு வரவு செலவுத் திட்டம் மூலம் அதிகரிக்கப்பட்டுள்ள 28% கொடுப்பனவை வழங்கும் செயற்பாட்டு நிகழ்வு மகரகமவில் இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், நாட்டில் முதல் தடவையாக இம்முறையே

06

## யாழில் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து போராட்டம்

**யாழ். குறூப், யாழ். விசேட, பருத்தித் துறை விசேட நிருபர்கள்**

பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் காலை 09 மணியளவில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தை இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கையெழுத்திட்டு ஆரம்பித்து வைத்தார்.



இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான எஸ்.சுகிர்தன், இ.ஆனல்ட், கே.சயந்தன் ஆகியோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

06

## சிறிசேனவும்– ரணிலும் பொருத்தமான நிலைமாற்றுக்கால நிகழ்ச்சி நிரலை உருவாக்க முன்வரவில்லை

*ஐ.நா. விசேட அறிக்கையாளர் பாப்லோ டி கிறீவ்*

நல்லாட்சி அரசாங்கத்துடனான ஈடுபாட்டின் போது நான் அதிகம் எதிர்கொண்ட தடை என்னவென்றால் ஜனாதிபதியும் பிரதமரும் பொருத்தமான நிலைமாற்றுக்கால நிகழ்ச்சி நிரலை உருவாக்க தயக்கம் கொண்டிருந்தனர்.

அவர்கள் அதனை முழுமையாக ஆதரிக்கவுமில்லை, அதற்கு எதிராகவும் செயற்படவில்லை, அதனை அப்படியே நடுவானில் விட்டனர். ஏனையவர்கள் அதனை தாக்கக் கூடிய இலக்காக மாற்றினார்கள் என்று ஐ.நா. விசேட அறிக்கையாளர் பாப்லோ டி கிறீவ் கூறியுள்ளார்.

அவர்கள் முன்னைய இலங்கை அரசாங்கங்கள் எதனை செய்ததோ அதனையே முன்னைய அரசாங்கத்தின் பிரதமரும் ஜனாதிபதியும் செய்தனர். சர்வதேச சமூகத்தின் ஆதரவை பெறுவதற்கான

06



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

பிலவ வருடம் மாசி மாதம் 05ம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரஜப் பிறை 15

### குறள் தரும் சிந்தனை



எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர்

எவ்வளவுதான் வழிமுறைகளை ஆராய்ந்து தெளிந்து தேர்ந்தெடுத்தாலும், செயல்படும் பொழுது வேறுபடுகிறவர்கள் பலர் இருப்பர்.

## அரசின் மீது களங்கம் ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட சதிமுயற்சி!

தொலைக்காட்சி சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித்த சமர விக்ரமவின் வீட்டின் மீது கல் மற்றும் மலக்கழிவு கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கடந்த திங்களன்று அதிகாலையில் முகத்தை மறைத்து கொண்டு சிறியரக வாகனம் ஒன்றில் வந்த இனம் தெரியாத மூவர் இத்தாக்குதலை நடத்தியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு வெகுஜன ஊடக அமைச்சர் டளஸ் அழகப்பெரும, பொலிஸ் மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். இந்த நிலையில் இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவென மூன்று பொலிஸ் விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் பல கோணங்களிலும் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் இதுவரையும் 32 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதோடு, இச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி கமெரா ஒளிப் பதிவுகளை ஆராயவென 09 குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன. இதில் 60 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இதேவேளை, இத்தாக்குதல் சம்பவத்தை அறிந்ததும் ஊடக அமைச்சர் மற்றும் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் ஊடகவியலாளர் சமுதித்தவின் இல்லத்திற்கு நேரில் சென்று நிலைமையைப் பார்வையிட்டு தம் வருத்தங்களைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர். அத்தோடு ஊடக அமைப்புகளும் இத்தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்திருக்கின்றன.

ஊடகவியலாளர் சமுதித்தவின் இல்லத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதன் நோக்கம், பின்னணி மற்றும் அதில் சம்பந்தப்பட்டுள்ளவர்கள் கண்டறியப்பட வேண்டும். அவர்கள் சட்டத்தின் முன் கொண்டு வரப்பட வேண்டும். இல்லாவிடில் அமைச்சர் குறிப்பிடுவது போன்று, 'பொலிஸ் விசாரணைகள் மூலம் குற்றவாளிகளை வெளிப்படுத்தத் தவறும் பட்சத்தில் அந்தப் பொறுப்பு அரசின் மீதே வரும்'.

ஆனால் நாட்டில் கருத்து சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் முக்கியத்துவம் அளித்திருக்கின்றது. அதனை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான சூழலில்தான் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில் அமைச்சர் டளஸ் அழகப்பெரும, 'கருத்து சுதந்திரத்திற்கு அழுத்தமோ, தடை போடும் முயற்சிகளோ எவ்விதத்தில் வந்தாலும் அதற்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது' என்றும் 'அவ்வாறான செயற்பாடுகளை ஊக்குவிக்கவோ நடந்தவற்றை மறைக்கவோ அரசாங்கம் முயலாது' என்றும் 'ஜனநாயகத்தை விரும்பாத மலசலகூடத்தில் மறைந்திருக்கும் நபர்களே இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்' என்றும் கடும் தொனியில் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஜனநாயகப் பாரம்பரியத்தில் ஊடகங்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. அதனால் ஜனநாயக விழுமியங்கள் நடைமுறையில் இருக்கும் நாடுகளில் நான்காவது தூணாக ஊடகங்கள் திகழ்கின்றன. அதன் விளைவாக ஊடகங்கள் மூலம் நாடும் மக்களும் பெற்றுக் கொள்ளும் பயன்களும் பிரதிபலன்களும் அளப்பரியவை. அவ்வாறு பெருஞ்சேவையாற்றி வரும் வெகுஜன ஊடகத்தை விரும்பாதவர்களும் அதன் கருத்து வெளியிடும் சுதந்திரத்தை நசுக்க விரும்புவர்களும்தான் ஊடகவியலாளர்கள் மீதும் அவர்களது இல்லங்கள் மற்றும் சொத்துகள் மீதும் தாக்குதல்களை மேற்கொள்வர். ஜனநாயகத்தை நேசிக்கும் எவரும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடவோ, அச்செயற்பாடுகளை நியாயப்படுத்தவோ, அவற்றை அங்கீகரிக்கவோ மாட்டார்கள்.

ஆனாலும் கருத்து வெளியிடும் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு சேறுபூசுவதற்கான முயற்சியாகக் கூட இத்தாக்குதல் நடவடிக்கை இருக்கலாம் என்ற சந்தேகமும் நிலவவே செய்கின்றது. அதேநேரம் இந்நாட்டில் நிலவிக் கொண்டிருக்கும் கருத்து வெளியிடும் சுதந்திரத்தை மௌனிக்கச் செய்வதற்கு இவ்வாறான செயற்பாடுகள் பெரிதும் உதவ முடியும் என்ற எதிர்பார்ப்பும் தாக்குதல் நடத்தியவர்களிடம் இருக்க முடியும். தற்போதைய கருத்து வெளியிடும் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் விடுப்பதாகவே இத்தாக்குதல் தெரிகிறது.

ஆனால் இந்நாட்டு ஊடகவியலாளர்கள் இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுப்பதை தற்போதைய அரசாங்கம்ஒரு போதும் அங்கீகரிக்காது. அதற்கு இச்சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விரிவான விசாரணைகள் நல்ல எடுத்துக்காட்டாக உள்ளன. ஆகவே இத்தாக்குதலின் மூலம் ஊடக மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் விடுத்தவர்களை சட்டத்தின் முன் கொண்டுவர முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதற்கு முற்றுப்புள்ளி வைப்பதாகவே உள்ளன. மக்களின் எதிர்பார்ப்பும் அதுவேயாகும்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கை-இந்திய உறவு தற்போது உயர்நிலையில்

## இலங்கையில் சீனாவின் பிரசன்னம் பற்றிய கவலைகள் 'கடந்த காலத்துக்குரியவை'

## 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்கு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் பேட்டி



இலங்கையும் இந்தியாவும் தமக்கிடையேயான நட்புறவுகளில் உயர் நிலையை அடைந்துள்ளதாகவும், இலங்கையில் சீனாவின் பிரசன்னம் பற்றிய கவலைகள் 'கடந்த காலத்துக்குரியவை' என்றும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அமைச்சர் பீரிஸ் இதனைக் கூறியுள்ளார்.

இந்திய மீனவர்களின் விவகாரம் தொடர்பாக குறிப்பிட்ட அவர், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி பிரவேசிக்கும் போது கைது செய்யப்படுவது, இன்றைய வேளையில் இந்தியாவுடனான உறவுகளில் ஒரு 'பாரதூரமான தருணம்' என்று கூறினார்.

13 ஆவது திருத்தம் தொடர்பாக கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த அவர், மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்தின் தேர்தல் சட்டங்களை மாற்றியமைக்கும் தீர்மானத்திற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியதன் காரணமாக 13வது திருத்தத்தின் அமுலாக்கத்தில் இடைநிறுத்தம் ஏற்பட்டுள்ளதாக கூட்டமைப்பின் மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

கேள்வி: நீங்கள் டெல்லிக்குச் சென்றிருந்த போது, இந்த மாத இறுதியில் இடம்பெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமை கள் பேரவையின் கூட்டத் தொடரில், இந்திய மத்திய அரசாங்கத்திடம் இருந்து ஏதேனும் உத்தரவாதத்தை மேலதிகமாக நாடினீர்களா?

பதில்: பெப்ரவரி 14 அன்று எங்களிடம் சிக்கலான பிரதியொன்று வழங்கப்படும். நாங்கள் இந்திய அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பில் இருக்கிறோம். மேலும், தற்போதைய மற்றும் முன்னைய காலத்தில் ஏற்பட்டுள்ள அனைத்து முன்னேற்றங்கள் குறித்தும் இந்தியா மிகவும் விழிப்புடன் இருக்கக் கூடும். குறிப்பாக காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான பணியகம், நிலையான அபிவிருத்தி இலக்குகள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற உள்ளூர் பொறிமுறைகள் என குறிப்பிடப்படும் நிறைவேற்றப்பட்ட வேலைகள் என்பனவாகும்.

கேள்வி: ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி எஸ் பி விடயத்தில் நீங்கள் எந்தளவு ஈடுபாட்டைக் கொண்டுள்ளீர்கள்?

பதில்: இலங்கையில் இருந்து ஜி.எஸ். பி பிளஸ் திரும்பப் பெறப்படுவதுஅதிகளவுக்கு சாத்தியமற்றது என்று நாம் நினைக்கிறோம். இருப்பினும் அது நிகழும் என்ற ஊகமான சந்தர்ப்பத்தை எடுத்துக் கொள்வோம். அதன் சுமையை யார் சுமக்கப் போகிறார்கள்? இலங்கையில் வசிப்பவர்களே குறிப்பாக ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களாவர். ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களில் 90% பெண்கள். அவர்களில் பலர் தங்கள் குடும்பங்களை தாபரிக்கிறார்கள். அவர்கள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. அத்துடன் , மீனவ சமூகங்கள் பாதிக்கப்படும். எனவே அதை அகற்றினால், இது அரசாங்கத்திற்கு எதிரான ஒரு தண்டனை நடவடிக்கை அல்ல. இது இலங்கை சமூகங்களின் வறிய பிரிவினருக்கு எதிரான ஒரு தண்டனை நடவடிக்கையாகும்.

கேள்வி: இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையில் திரும்பத் திரும்ப எழுந்துள்ள பல விடயங்களில் ஒன்றாகவும், இலங்கையில் தீர்வு காண முடியாத நிலைமையில் உள்ள ஒரு விடயமாகவும் தமிழர் அரசியல் பிரச்சினை உள்ளது. பதின்மூன்றாவது திருத்தம் இலங்கையின் அரசியலமைப்பின் ஒரு அங்கமாகும். பதின்மூன்றாவது திருத்தத்தின் முதன்மையான பண்பு மத்திய அதிகாரத்திற்கும் மாகாண சபைகளுக்கும் இடையிலான அதிகாரப் பகிர்வாகும். கடந்த இரண்டு ஆண்டுகளாக என்ன நடந்தது? மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறவில்லை.

பதில்: அதற்கான காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர வேறு யாரும் இல்லை.இலங்கையின் 2015 முதல் 2019 வரையிலான நிர்வாகம் இந்தத் தேர்தல்களை நடத்தவில்லை. தாங்கள் தோற்கடிக்கப்படுவார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும், அது மிகவும் அவமானகரமான தோல்வியாக இருக்கலாம். எனவே அந்தத் தேர்தலை நடத்துவதில்லை என்று முடிவு செய்துள்ளனர். அதேநேரத்தில் நீதிமன்ற உத்தரவை அவர்களால் மீற முடியவில்லை. [தேர்தல் நடத்தப்பட வேண்டும்]. எனவே அவர்கள் ஒரு புத்திசாலித்தனமான தீர்மானத்தை எடுத்தனர். சரி, நாங்கள் தேர்தலை நடத்துவோம், எனினும் தேர்தல் முறைமை ஏற்றுக் கொள்ள முடியாதது. தேர்தல் முறைமையை மாற்றியமைக்க வேண்டும் என்பதுதான் தீர்மானம்.

அந்தத் தருணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்புஆட்சியாளர்களுக்கு ஆதரவாளராக இருந்தது. தமிழ்க் கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கியது. அவர்கள் 16 ஆசனங்களை கொண்டிருந்தனர். அவர்கள் வடக்கு, கிழக்கில் மாத்திரமல்ல இலங்கையின் அனைத்து மக்களுக்கும் பாதகத்தை ஏற்படுத்தினர். அதை வேண்டுமென்றே செய்து விட்டு இப்போது இந்திய அரசை வசீகரிக்கின்றனர்.

# ஹிஜாப் ஆடைக்கு அனுமதி வழங்குவதன் மூலம் இந்தியாவில் சர்ச்சைக்கு முடிவு காண வேண்டும்!

முஸ்லிம் சமூகங்களில் பெரும்பாலான பெண்கள் பொது இடங்களில் அடக்கமான ஆடைகளை அணிந்து, தலைமுடியை மறைக்கும் ஆடைகளை அணிந்து வருகின்றனர். இது ஒரு புரட்சிகர அணுகுமுறையோ அல்லது கடுமையான மதவாதச் செயலோ அல்ல. தீய மனிதர்களின் தேவையற்ற வர்ணனைகள், பார்வைகள் ஆகியவற்றிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளவும், சுயமரியாதையைப் பாதுகாக்கவும் முஸ்லிம் பெண்கள் இந்த ஆடையை அணிந்து கொள்கின்றனர்.

இயந்திர யுகத்தின் தொழில் மயமாக்கலுக்கு முன்னர் ஒரு நாகரிகமான முறையாக இருந்தது அது.

இந்தியாவின் சில பகுதிகளில் இந்துப் பெண்கள் பாரம்பரியமாக 'கூங்காட்' எனும் முக்காட்டை அணிந்து வருகின்றனர். அதாவது பொது இடங்களில் தலையை மூடும் ஒரு வழக்கம் இன்றும் கிராமப்புறங்களில் உள்ளது. இந்த நடைமுறை பரவலாக கடைப்பிடிக்கப்பட்டு வருவதைக் காண முடிகிறது.

இது பெண்களின் தனிப்பட்ட விருப்பமாகும். மேலும் பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளில் கல்வியைத் தொடரும் போது அல்லது வேலை செய்யும் போது ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கி பாதுகாக்க அவர்கள் விரும்புகின்ற ஆடைத் தெரிவாகும். மேலும் இது ஆற்ற வேண்டிய எந்தவொரு சமூகப் பொறுப்புக்கும் ஒரு தடையாக இருப்பதில்லை.

இந்த மறுக்க முடியாத உண்மைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஆனால் சமீபத்தில் தென்னிந்திய மாநிலமான கர்நாடகாவில் உள்ள கல்லூரி ஒன்றில் ஹிஜாப் அணிந்து வரும் பெண்கள் (முஸ்லிம் பெண்கள்) வகுப்புகளுக்கு வருவதைத் தடை செய்வதற்கான தவறான நடவடிக்கை, கடந்த சில காலமாக அராஜகவாத சக்திகளால் அரசியலாக்கப்பட்டு, சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. பல தசாப்தங்களாக நிர்வாக மற்றும் அரசாங்க இயந்திரங்களில் இந்தக் கும்பல் ஊடுருவி இஸ்லாமிய வெறுப்பின் சூழலை உருவாக்கியுள்ளது.

உடுப்பி மாவட்டத்தில் உள்ள குறிப்பிட்ட கல்லூரியின் அதிகாரிகளைப் பொறுத்தவரை, கல்வி மையங்களில் ஹிஜாப் மீது பிரான்ஸ் நாட்டில் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்தான் அவர்கள் தங்களை ஏமாற்ற அனுமதித்ததா அல்லது வெறுப்புணர்ச்சியை தூண்டும் அரசியல்வாதிகளால் இது போன்ற தவறான முடிவை எடுக்குமாறு உத்தரவிடப்பட்டதா என்பது தெரியவில்லை. ஆனால் இந்த நடவடிக்கையானது கட்டுப்பாட்டை மீறி நாடு முழுவதும் பரவும் அபாயம் உள்ளது.



இந்தியா எந்த நிலத்திலும் அதிக எண்ணிக்கையிலான முஸ்லிம்களைக் கொண்ட ஒரு பல்மொழி நாடாகும். இது முந்நூறு மில்லியனுக்கும் அதிகமான எண்ணிக்கையிலான மற்றும் தேசிய மக்கள் தொகையில் 25 சதவீதத்தைக் கொண்டுள்ளது. மற்றைய 75 சதவீதம் இந்து பெரும்பான்மை மற்றும் இவர்களில் கோடிக்கணக்கான தலித்துகள் அடங்குவர். மற்றும் பல மில்லியன் கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், ஜைனர்கள், ஜோராஸ்ட்ரியர்கள் உட்பட பல்வேறு மதங்களை பின்பற்றுவோரும் உள்ளனர்.

இது பல்வேறு மதங்கள், பிரிவுகள், கலாசாரங்கள், மொழிகள் மற்றும் பழக்கவழக்கங்களுக்கு இடையே வேற்றுமையில் ஒற்றுமை காணும் சகோதரத்துவ உணர்விற்கான பிரபலமான தேசமாகும். அதன் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அதன் ஸ்தாபகத் தந்தைகளான மகாத்மா காந்தி மற்றும் ஜவஹர்லால் நேரு போன்றவர்களின் அகிம்சை பங்களித்துள்ளது.

எனவே வரலாற்றை மறந்த இன்றைய அரசியல்வாதிகள், எதிர்மறையான சொற்களை பரப்புவதன் மூலம் கல்வி நிலையங்களில் ஹிஜாப் பிரச்சினையை உருவாக்கி நீதிமன்றங்களுக்கு இழுப்பதன் மூலமாக தேசிய ஒற்றுமையை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

கர்நாடக மாநிலம் மட்டுமின்றி இந்தியா முழுவதும் நலன்களுக்காக எடுக்க வேண்டிய புத்திசாலித்தனமான நடவடிக்கை என்னவெனில், கல்லூரி அதிகாரிகளின் இந்த விவேகமற்ற முடிவை ரத்து செய்து, ஹிஜாப் அணிந்த முஸ்லிம் பெண்களை வகுப்புகளில் கலந்து கொள்ள அனுமதிப்பதாகும். அதன் மூலம் சர்ச்சையை முளையில் கிள்ளி எறிய வேண்டும். தீயவர்களின் திட்டத்தை முறியடிக்க வேண்டும்.

**தாஹா முஸம்மில்...**
(ஈரான் கலாசார நிலையம், இலங்கை)

# மனநிலை பாதிப்புற்றவரை கல்லால் எறிந்து கொன்று சடலத்தை மரத்தில் கட்டி தொங்க விட்ட கும்பல்!

## பாகிஸ்தானில் மீண்டும் அரங்கேறிய காட்டுமிராண்டித்தனம்!

மறுபடியும் ஒரு கொடுமை பாகிஸ்தானில் அரங்கேறியுள்ளது. மனநலம் குன்றிய ஒருவரை இரு தினங்களுக்கு முன்னர் கல்லால் அடித்து கொன்றுள்ள சம்பவம் அந்த நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கையை சேர்ந்த பிரியந்த குமார என்ற பொறியியலாளர் உயிருடன் தீவைத்து எரிக்கப்பட்ட பயங்கரம் அடங்குவதற்கிடையில் தற்போது மற்றொரு சம்பவம் அங்கு நடந்துள்ளது. பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் ஜங்கல் டேரா என்ற கிராமம் உள்ளது. இங்கு வசித்து வந்தவர் முஸ்டாக் அகமது என்ற 41 வயது நபர். இவர் மனநலம் குன்றியவர். புனித சமய நூலின் பக்கங்களைக் கிழித்து, தீவைத்து இவர் எரித்து விட்டதாக கூறி, அந்தப் பகுதியில் உள்ள மக்கள் கும்பலாக ஒன்று சேர்ந்துள்ளனர்.

அகமதுவை தரதரவென இழுத்துச் சென்று மரத்தில் கட்டி வைத்து, அனைவரும் கல்லால் தாக்கி உள்ளனர். அகமது கதறினார்.. "நான் புனித நூலின் பக்கங்களை எரிக்கவே இல்லை"என்று துடிதுடித்து அழுது கொண்டே சொன்னார். ஆனால் யாருமே அவர் பேச்சைக் கேட்கவில்லை. அகமது அங்கேயே துடிதுடித்து உயிரிழந்து விட்டார்.

இந்தச் சம்பவம் பற்றிய செய்தி வெளியானதும் உலகளவில் பெரும் அதிர்வலை ஏற்பட்டது. அவரை படுகொலை செய்ததோடு மட்டுமன்றி அவரின் சடலத்தை மரத்தில் கட்டி தொங்கவிட்டுள்ளனர். இந்த கும்பல் கல்லாலேயே அகமதுவை அடித்த போது பொலிசார் சிலர் அங்கு இருந்தபோதும், யாராலும் இந்தக் கொலையை தடுத்து நிறுத்த முடியவில்லை. இறுதியில் அங்கிருந்த முக்கிய குற்றவாளியை பொலிசார் கைது செய்தனர். ஆனாலும் அந்த கும்பல் விரைந்து வந்து, பொலிசாரிடம் இருந்து அந்த நபரை விடுவித்து, இழுத்து சென்று விட்டது. அகமதுவின் சடலத்தை மரத்தில் இருந்து கீழே இறக்க பொலிசார் முயன்றுள்ளனர். அவர்களையும் அந்த கும்பல் கற்களை வீசி தாக்கி உள்ளது. இந்த பயங்கரமான சம்பவத்துக்கு பிரதமர் இம்ரான்கான் வேதனை தெரிவித்துள்ளார். சட்டத்தை பொது மக்கள் கையில் எடுத்துக் கொள்வதை தன்னுடைய அரசு ஒருபோதும் சகித்துக் கொள்ளாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த கொலைச் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் அதிகாரிகளுக்கு இம்ரான் கான் உத்தரவிட்டுள்ளதுடன், இது குறித்து பஞ்சாப் பொலிஸ்துறை தலைவரிடம் அறிக்கை கேட்டுள்ளதாகவும் தன்னுடைய ட்விட்டர் பதிவில் கூறியுள்ளார்.



(ONEINDIA TAMIL)

# மனிதாபிமானம் மிகுந்த முற்போக்கு அரசியல்வாதி நாலந்த எல்லாவல



**எல்லாவல பரம்பரையின் தாயகம் சப்ரகமுவ ஆகும். எஹலியகொடவுக்கு சிறிது தூரத்தில் எல்லாவல என்னும் கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு வசித்து வந்த எல்லாவல பரம்பரையினர் பின்னர் திருமண பந்தங்களுடன் பிரபல்யமான பிரபுக்கள் குடும்பத்துடன் இணைப்பினை ஏற்படுத்திக் கொண்டார்கள். அவர்களில் பலங்கொட ரத்வத்தை குடும்பத்தாரும், கண்டி கொப்பேகடுவ குடும்பத்தாரும் அடங்குவார்கள்.**

எல்லாவல பரம்பரைக்கு ஆரம்பகாலம் தொட்டு உரிமையாக வயல் மற்றும் காணிகள் அநேகமானவை காணப்பட்டன. அதனை நிர்வகிப்பதில் திருப்தி அடையாத சில எல்லாவல பரம்பரையினர் பலவிதமான தொழில்களில் ஈடுபட்டார்கள். அதன் காரணமாகவே ஹெலின்ஸ் எல்லாவல விமானியானார்.

காலமாற்றத்தால் பரம்பரையான சொந்த பூமியை கைவிட்டு சப்ரகமுவையிலேயே வேறொரு பிரதேசத்துக்கு இடம்பெயர்வதற்கு எல்லாவல பரம்பரையினர் எண்ணினார்கள். அதன்படி சிட்னி எல்லாவல இரத்தினபுரி பட்டுகெதரயை தெரிவு செய்தார். சிட்னியின் மகனான மொஹான் பலங்கொட மஹவல தென்ன வளவ்வுக்கு அருகில் வாசஸ்தலத்தை அமைத்து குடியேறினார். சிட்னி எல்லாவலைக்கு நான்கு பிள்ளைகள். ராணி,நந்த,மொஹான் மற்றும் சேனக ஆகிய அவர்கள் பட்டுகெதரயிலேயே வளர்ந்தார்கள்.

பண்டாரநாயக்க குடும்பத்துடன் இணைந்திருந்த சிறிமாவோ ரத்வத்தை அம்மையார் தனது கணவரின் மரணத்துடன் அரசியல் பயணத்தில் ஈடுபட வேண்டி நேரிட்டது. அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவிக்கு நியமிக்கப்பட்டவுடன் தனது உறவினர்களை அதில் இணைத்துக் கொள்ளும் அளவிற்கு அதிர்ஷ்டசாலியாக இருந்தார். கொப்பல்லாவ, ரத்வத்தை, எல்லாவல ஆகியோர் அவருடன் கைகோர்த்துக் கொண்டார்கள். அப்போது இளைஞராக இருந்த நந்தா எல்லாவல தனது உறவினருடன் இரத்தினபுரியிலேயே அரசியல் களத்தில் இறங்கினார். அதன் பின்னர் மொஹான் பலங்கொடையிலும், மொண்டி கொபல்லாவ லக்கலையிலும், கொப்பேகடுவ யட்டிநுவரையிலும் அவருடன் ஒன்றாக இணைந்து கொண்டார்கள்

பிறப்பிலேயே பிரபுத்துவம் கொண்ட அவர்களிடம் உண்மையான மக்களுக்கான நேசம் காணப்பட்டது. ஒடுக்கப்பட்ட அப்பாவி மக்களை முன்னிலைப்படுத்திய சக்திக்கு தலைமைத்துவம் அளிப்பதற்கு அவர்களால் முடிந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து அரசாங்கத்தை அமைத்த சமசமாஜ மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் மிகவும் இணைந்து நடவடிக்கையில் ஈடுபட்டார்கள். இரத்தினபுரியில் நந்தா எல்லாவலவும், கலவானையில் முத்தெட்டுவேகமவும், கிரியல்லவில் வாசுதேவவும் இந்த முற்போக்கு சக்திகளின் பிரதிநிதிகள் ஆனார்கள்.

இவ்வாறு நீதி மற்றும் நியாயமான அரசியலில் ஈடுபட்ட வேளையில் துரதிர்ஷ்டவசமாக நந்தவும் சரத்தும் இவ்வுலகை விட்டு பிரிந்தார்கள். நந்தாவின் பிள்ளைகளான விசாகா மற்றும் நாலந்த தனது தந்தையின் அரசியல் பாதையில் செல்லும் அளவிற்கு வயது முதிர்ந்தவர்கள் அல்ல. ஆனால் அதனால் தளராத நாலந்தா தந்தையின் கையில் இருந்து விழுந்த கொடியை மீண்டும் மாகாணசபை தேர்தல் மூலம் தனது கைகளில் எடுத்தார். நந்தாவை நேசித்த இரத்தினபுரி மக்கள் நாலந்தாவை தனிமைப்படுத்தவில்லை. இளம் வயதான வேட்பாளரான அவரை முதிர்ச்சியடைந்த அரசியல்வாதிகளையும் தாண்டி முன்வரிசையில் வைப்பதற்கு நன்றியுள்ள வாக்காளர்களால் முடிந்தது. மொஹான் பலங்கொடையிலும், நாலந்த இரத்தினபுரியிலும் போட்டியிட்டு சப்ரகமுவ மாகாண சபைக்கு தெரிவானார்கள்.

சந்திரிகா பண்டாரநாயக்கவின் தலைமையில் 1994 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பொதுத் தேர்தலில் போட்டியிட்டது. இயற்கையிலேயே எல்லாவல குடும்பத்தினர் மிகவும் உயரமானவர்கள். அவர்களில் உயரம் குறைந்த ஒரே நபர் நாலந்தா ஆவார்.அவரின் அந்த சிறிய உடம்புக்குள் 18 அடி நபர் ஒருவர் மறைந்துள்ளதை மக்கள் சரியாக 1994 ஆம் ஆண்டு தேர்தல் மூலமே அறிந்து கொண்டார்கள். அங்கு அவருக்கு அதனாலேயே பாரிய வெற்றி கிடைத்தது.

இறுதிக் கூட்டம் இரத்தினபுரியில் நடைபெற்றது.மேடைக்கு தடை செய்யப்பட்டிருந்த நாலந்த, பவித்ரா ஆகியோர் தூரத்திலிருந்து கூட்டத்திற்கு செவிமடுத்துக் கொண்டு இருந்தார்கள். இறுதியில் நாங்கள் அவர்களை இரவு உணவு உண்ணும் இடத்திலேயே சந்தித்தோம். அங்குதான் முதன் முதலாக நாலந்தாவை சந்தித்தேன்.

எங்களுக்கு பாதுகாப்பு தொடர்பில் பிரச்சினை உள்ளதாக நான் அவருக்குக் கூறினேன்.

"எனக்கு சிறிது நேரம் தாருங்கள்"

பத்து நிமிடங்களின் பின்னர் அவர் திரும்பவும் வந்தார்.

"உங்களுடைய பஸ்ஸை நடுவில் விட்டு எங்களுடைய இரண்டு வாகனங்கள் செல்லும். அதில் எமது இளைஞர்கள் இருக்கிறார்கள். பயமில்லாமல் நீங்கள் கொழும்புக்குச் செல்லலாம்."

## காலங்கள் கடந்தாலும், மக்களின் உள்ளத்தை விட்டு நீங்காத அரசியல்வாதி

கொஸ்கம வரையும் வந்து நாங்கள் பஸ்ஸை நிறுத்தி 2 வாகனங்களையும் திருப்பி அனுப்ப முடிவு செய்தோம்.

"நாலந்தாவிடம் எங்களுக்கு ஏச்சு வாங்க முடியாது. நீங்கள் கொழும்புக்கு போகும் வரை நாங்கள் திரும்பிச் செல்ல மாட்டோம்."

அவர்கள் அவ்வாறு அதனை நிராகரித்தார்கள். நாம் எதிரிகளின் தொல்லை இன்றி கொழும்புக்கு வந்தோம்.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த ஒரு வருடத்தின் பின்னர் வெள்ளைத்தாமரை திட்டத்தை ஆரம்பித்தது. தேசிய சேமிப்பு வங்கியில் பணிபுரிந்த நான், அதனுடன் தொடர்பாடல் அதிகாரியாக இணைந்து கொண்டேன். அதன் பொறுப்பு அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு வழங்கப்பட்டது. அனைத்துத் தொகுதிகளிலும் வெள்ளைத் தாமரை இணைப்பு காரியாலயங்கள் அமைக்கப்பட்டதோடு இளைஞர் பாசறை கருத்தரங்கு போன்றவை எம்மால் ஏற்பாடு செய்யப்பட்டன. எமக்கு முதற் தடவையாக பாராளுமன்ற உறுப்பினர்களே ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

அவர்கள் இரவு பகல் பாராது வெள்ளைத்தாமரை தலைமை காரியாலயத்தில் தங்கியிருந்தார்கள். நாலந்த, டிலான், சாலிந்த, டி பி ,சி பி ,அனுரயாப்பா, ஜயதிஸ்ஸ ரணவீர ,மஹிந்த அமரவீர, பவித்ரா, நிருபமா, தமு போன்றவர்கள் அதில் அடங்கினார்கள். லூஷன் ராஜகருணாநாயக்க, ஜோன் செனவிரத்ன, சுரேன் ராகவன் போன்ற சமூக செயல்பாட்டாளர்களும் அமைச்சர் ஜி. எல். பீரிஸின் செயலணியில் இருந்த கருணாரத்ன பரணவிதான, தயாசிறி ஜயசேகர, ஜனக ரணதுங்க போன்றவர்களும் அமைச்சர் பேர்டி பிரேமலாலும் எமது அணியுடன் இணைந்திருந்தார்கள். வெள்ளைத் தாமரை ஆரம்பக் கூட்டம் BMICH இலும், இரண்டாவது கூட்டம் சுகததாச விளையாட்டரங்கிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தலைமைக் காரியாலயத்தில் நோமன், சமிந்த லியனகே, தம்மிக பீரிஸ் உள்ளிட்டோரிடையே முழுநேர ஒத்துழைப்பை நாலந்த, டிலான் எமக்கு வழங்கினார்கள். நாலந்தா எவ்வளவு சிநேகமானவர், விருந்தோம்பல்மிக்கவர், தியாகத் தன்மை உடையவர் என்பதை உண்மையில் இக்காலப் பகுதியிலேயே நான் அறிந்து கொண்டேன்.

திடீரென தலையில் இடி விழுந்தது போல் செய்தியொன்று எமக்குக் கிடைத்தது. நாலந்தா குண்டடிபட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக செய்தி கிடைத்தது. அமைச்சர்கள் மங்களவும் பேர்டி பிரேமலாலும் கவலை தோய்ந்த முகத்துடன் காரியாலயத்துக்கு வந்தார்கள். செய்தியறிந்து பொதுமக்களும் அதிகளவில் கூடத் தொடங்கினர். அவ்வேளையிலேயே நாலந்தா இறந்த செய்தி கிடைத்தது. நானும் சமிந்தவும் உடனடியாக இரத்தினபுரிக்குச் சென்றோம். இறுதிக் கிரியைகள் முடியும்வரை அங்கு தங்கியிருந்தோம். அன்றிரவை நிவித்திகல டிக்ஸன் தேலபண்டாரவின் வீட்டில் கழித்தோம். அவர் மீதான துப்பாக்கிச் சூடு தொடர்பாக குறிப்பிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் வேறு சிலரும் கைது செய்யப்பட்டிருந்தார்கள். பழக்கப்பட்ட இடமான சிறைச்சாலை அவர்களுக்கு புதிதாக தெரிய வாய்ப்பில்ல.



இரத்தினபுரி நகரில் அமரர் நாலந்தவின் உருவச்சிலை

ஆனால் அவரது இழப்பு சுரங்கனி எல்லாவல அன்னைக்கும், சகோதரி விசாக்காவுக்கும், அவருடன் நெருங்கிப் பழகிய எம் அனைவருக்குமே பாதிப்பை ஏற்படுத்தியது. ஞாபகங்கள் மறைந்து போக இடமளிக்காது டலஸ், டிலான் மற்றும் விசாகா உள்ளிட்ட எமது அணியினர் நாலந்தா நினைவுக் கூட்டமொன்றை இரத்தினபுரி மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் நடத்தினோம். நினைவுக் கூட்டத்துக்கு மத்தியில் இசை நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது அதில் தனது மகன் தொடர்பாக அன்னை சுரங்கணி எழுதிய பாடல் வரிகளை பிரதீபா தர்மதாச அனைவரினதும் கண்களில் நீர் வழிய பாடினார்.

காலம் வேகமாக கரைந்து ஓடியது. மெல்ல மெல்ல நாலந்தாவின் ஞாபகம் மறைந்து புதிய தலைப்புகள் உருவாகின. மிருகத்தனமாக கொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களின் எலும்புக்கூடுகள் மற்றும் இற்றுப்போன ஆடை அணிகளும் சூரியகந்தவில் தோண்டி எடுக்கப்பட்டன. பத்திரிகைகளும் மற்றும் தொலைக்காட்சிகளின் கமராக்களும் சூரியகந்தவை நோக்கித் திரும்பின. பிள்ளைகளின் புகைப்படங்களை கையில் ஏந்திய பெற்றோர் தங்களது துயரத்தை தொலைக்காட்சி கமராக்கள் முன் தெரிவித்தார்கள். அழுகுரல்,குற்றச்சாட்டுகளுக்கு முடிவில்லை. நினைவுக் கூட்டங்கள்,புகைப்படக் கண்காட்சி ,மகாநாடு,எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நாடு பூராவும் ஏற்பாடு செய்யப்பட்டன. அவ்வேளையில் அமைச்சர் மங்கள சமரவீர பாராளுமன்றத்திற்கு திரும்பும் சந்தியில் மரணமடைந்த பிள்ளைகளுக்காக அருங்காட்சியகம் ஒன்றையும் நாலந்தாவின் உருவச்சிலை ஒன்றையும் அமைக்க வேண்டுமென ஆலோசனை கூறினார்.

குறிப்பிட்ட ஒரு நாளில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று பாராளுமன்றத்தில் அமைச்சர் மங்கள சமரவீரவின் தலைமையில் நடைபெற்றது. அதில் வெள்ளைத் தாமரை இயக்கத்தை சேர்ந்த நாமும் அமைச்சரின் செயலணியினரும், டிலான், டலஸ் போன்ற பாராளுமன்ற உறுப்பினர்களும், விசாகா மற்றும் சானிக்கா கொபல்லாவ ஆகியோரும் கலந்து கொண்டோம். கலந்துரையாடலின் பின்னர் பாராளுமன்ற உணவு கூடத்திற்கு பகல் உணவுக்காக டிலானுடன் சென்றோம். நாலந்தா கொலைக்கு குற்றச்சாட்டப்படிருந்த சந்தேகநபரான பாராளுமன்ற உறுப்பினர் பிணையில் விடுதலை செய்யப்பட்டு உணவு கூடத்திற்கு வந்தார். அவரைக் கண்டதும் டிலான் ஆவேசம் அடைந்தார்.

"கொலைகாரர்களுடன் எம்மால் உணவருந்த முடியாது .நாம் செல்வோம்" என்றார்.

அவருடன் நாமும் வெளியேறினோம். விசாகா உடனடியாக சந்தேகநபரான பாராளுமன்ற உறுப்பினர் அருகில் சென்றார்.

"பிணையில் விடுதலையாகி வந்திருந்தாலும் மனசாட்சியிலிருந்து நீங்கள் விடுதலை ஆக முடியாது. நாலந்தாவின் அக்கா என்ற முறையில் நாம் ஒருபோதும் உங்களுக்கு மன்னிப்பு அளிக்க மாட்டோம்"

விசாகாவின் ஆவேசமான அந்த பேச்சுக்கு மத்தியில் அவர் எதுவும் கூறவில்லை.

பின்னர் அவர் சபாநாயகரிடம் முன் பின் அறியாத பெண்ணொருவர் எனக்கு அச்சுறுத்தல் விடுத்தார் என முறைப்பாடு செய்திருந்தார்.

அப்பாவிகளின் நினைவுக் கூடமும் நாளந்தாவின் உருவச் சிலையும் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இந்தக் கொலையுடன் தொடர்புடையவர்கள் பாராளுமன்றத்துக்கு செல்லும்போது காலையும் மாலையும் இந்த சம்பவத்தை நினைக்க வேண்டும் என்பதே அமைச்சர் மங்கள சமரவீரவின் கருத்தாக இருந்தது.

அப்பாவிகளின் கூடத்தை அமைக்கும் பணி ஜகத் வீரசிங்கவுக்கும் நாளந்தாவின் உருவச் சிலை அமைக்கும் நடவடிக்கை ஜயந்த கோலியவங்சவுக்கும் வழங்கப்பட்டன. இவ்விதம் இவ்விரு இடங்களும் வெகு சிறப்பாக திறந்துவைக்கப்பட்டன. நாலந்தாவின் உருவச்சிலைக்குரிய நினைவு கவிதை மற்றும் சுலோகத்தை நானே எழுதினேன்.

காலங்கள் கடந்தன அரசாங்கங்களும் பலதடவைகள் மாறின. காட்சி கூடம் மற்றும் உருவச்சிலை தொடர்பான கவனமும் குறைந்தது. நினைவுக் கூடத்தை உடைத்து பசுமைப் பூங்கா அமைக்கப்பட்டது. நாளந்தாவின் உருவச்சிலை லொறியில் ஏற்றப்பட்டு அந்த இடத்தில் குடும்பம் ஒன்று குடியேற்றப்பட்டது. அவர்கள் வெள்ளை உடை அணிந்து இன்று வரை அமைதியாக அங்கு வாழ்கிறார்கள். நாலந்தாவின் உருவச்சிலையை அவர் சுடப்பட்ட குருவிட்ட சந்தியில் அமைக்க ஒருவாறு அனுமதி கிடைத்தது. நாலந்தாவின் மரணத்தால் அரசியல் இலாபம் பெற்றவர்களும் மற்றும் புலம்பி அழுதவர்களும் இன்று அமைதியாக உள்ளார்கள்.

நாலந்தாவின் மரணத்தின் பின்னர் நடந்த ஒரே ஒரு விசேட சம்பவம் என்னவென்றால் அன்னை சுரங்கனி எல்லாவலவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பெற்றுக் கொடுத்ததாகும். கொலைகார அரசியல்வாதிகளின் அரங்கான இரத்தினபுரியில் இருந்து சுரங்கனி அம்மையார் போன்ற பண்பான பெண்ணால் கண்ணியமான அரசியலில் ஈடுபட முடியுமா என்பதே எனது கேள்வியாக இருந்தது. இன்று அவரும் எம்மிடையே இல்லை.

தனது தந்தை, அன்பான சகோதர், நேசம் மிக்க அன்னை, மொஹான் எல்லாவல, சிறிய தந்தை ஆகியோரை இழந்து தனிமையில் வசிக்கும் விசாகா, தான் இழந்தவர்களுக்காக ஆஜராகியுள்ளார். தற்போது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மொஹானின் புதல்வர் அகில தனது உறவினரான விசாகாவுடன் துணையாக நிற்பார். நாலந்தாவினதும் குடும்பத்தாரினதும் மனிதாபிமானம் மற்றும் முற்போக்கு கருத்துக்களை தலைமேல் ஏற்றுக் கொண்டுள்ள நாம், அவரை தனிமைப்படுத்த தேவையில்லை. அகாலத்தில் வாடிப்போன அழகான மலரின் நறுமணத்தால் நாட்டையையே மணம் வீசச் செய்வோம்.

**பண்டார எஹலியகொட...✍**
**தமிழில்: வீ.ஆர்.வயலட்**

# 'மருதமுனை நெசவுத் தொழில்' மறைந்து விடாமல் புத்துயிரளிக்கும் பஹத்ஸமான்



**அம்பாறை மாவட்டத்தின் மருதமுனையில் கைத்தறி ஆடை உற்பத்தி தொழில்துறை மிகவும் பழைமை வாய்ந்ததாகும். பருத்திப் பஞ்சை நூலாக நூற்று, மரப்பட்டைகளை ஊற வைத்து அதில் நிறம் தீட்டி, சூத்திரத்தில் பாவோடி குழித்தறியில் சாரம், சேலை, கம்பாயம், வேட்டி, கைக்குட்டை, சால்வை போன்ற ஆடைகளை உற்பத்தி செய்த வரலாறு மருதமுனை கிராமத்திற்கு உண்டு. இதை அடியொற்றி இன்றுவரை இந்த கைத்தறி உட்பத்தித் தொழில்துறை மருதமுனையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.**

அது மாத்திரமன்றி இப்பிரதேசத்தில் தமிழ், முஸ்லிம் மக்களின் இனநல்லுறவுக்கு மருதமுனை கைத்தறி நெசவுத்தொழில்துறை பெரும் பங்காற்றி வருகின்றது. தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் மருதமுனைக்கு வந்து நெசவுத் தொழிலைப் பயின்று அதில் வருமானம் பெற்று வருகின்றனர்.

ஆனாலும் இத்தொழில் மீது மக்களுக்கு படிப்படியாக ஆர்வம் குறைந்து கொண்டு வருவதைக் காண முடிகின்றது. தற்பொழுது கல்லாறு, களுவாஞ்சிக்குடி, களுதாவளை,தேத்தாத்தீவு,கொக்கொட்டிச்சோலை உள்ளிட்ட பல கிராமங்களிலும் உள்ள இளைஞர், யுவதிகள் இந்தத் தொழிலை அவர்களின் கிராமங்களிலே செய்து வருகின்றனர்.

கடந்த காலத்தில் பலர் கைத்தறி உற்பத்தியில் பல சாதனைகளைச் செய்து, கைத்தறி ஆடை உற்பத்தியை மேம்படச் செய்து வாழ்ந்து மறைந்துள்ளனர். இவர்களை அடியொற்றி இன்றுவரை இத்தொழிலை பலர் செய்து வருகின்றனர். குறிப்பிட்ட ஒரு சிலர் புதுமெருகுடன் வித்தியாசமான சிந்தனையில் உற்பத்திகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வரிசையில் இளைய தலைமுறை உற்பத்தியாளராக மருதமுனை பதுறுஸ்மான் பஹத்ஸமான் தன்னை ஆழமாகத் தடம்பதித்து வருகின்றார். 1931ஆம் ஆண்டு தொடங்கி இன்றுவரை பரம்பரை பரம்பரையாக (மூன்றாவது தலைமுறை) இந்த கைத்தறி நெசவுத் தொழில் துறையை மிகவும் சிறப்பாகச் செய்து வந்திருக்கின்றனர். அதற்கேற்ப பதுறுஸ்மான் பஹத்ஸமான் இத்தொழிலை மிகவும் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றார்.

பதுறுஸ்மான் பஹத்ஸமான் இன்றைய நவீனத்திற்கேற்ப ஆடை உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தி சந்தைக்கு ஏற்ற வகையில் வித்தியாசமாக, தரம்மிக்கதாக உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தி வருகின்றார். நுகர்வோர் விரும்பும் வகையில் சாறம், சேலை, ஷேர்ட், சல்வார், லுங்கி, கைப்பை, சோள் மற்றும் துணிவகைகள் என பல உற்பத்திகளை மேற்கொண்டு வருகின்றார்.

இவர் 1982 ஆம் ஆண்டு மருதமுனையில் பிறந்தவர். பதுறுஸ்மான் சித்தி மர்ஜானா தம்பதியரின் புதல்வரான இவர் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் பழைய மாணவராவார். இவர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் விரிவுரையாளராக கடந்த எட்டு வருடங்கள் கடமையாற்றியுள்ளளார். மேலும் தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் வருகைதரு விரிவுரையாளராகவும், இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையிலும் வருகைதரு விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

அத்துடன் ஹோட்டல் முகாமைத்துவப் பட்டப்படிப்பையும் கலைத் துறையில் பட்டப்படிப்பையும் நிறைவு செய்துள்ளார். கொழும்பில் உள்ள பிரபல்யமான ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலும் கடமையாற்றியுள்ளார்.

தொழில் துறைக்காக பல சான்றிதழ்களையும்,விருதுகளையும் இவர் பெற்றுள்ளார். இந்தத் தகைமைகளோடு கைத்தறி ஆடை உற்பத்தித் தொழிலை மிகவும் சிறப்பாகச் செய்து வருகின்றார்.



இவரது தொழில் நிலையங்கள் மருதமுனை, பாலமுனை, மத்திய முகாம், கொலனி ஆகிய இடங்களில் இயங்கிவருகின்றன.

இவர் பாடசாலைக் காலங்களில் விளையாட்டு மற்றும் போட்டி நிகழ்ச்சிகளில் திறமை காட்டியவர். பல பொது அமைப்புகளிலும், கழகங்களிலும் இணைந்து செயற்பட்டு வருகின்றார்.சமூக சேவையில் அதிக ஆர்வமுடன் செயற்பட்டு வருகின்றார். இவரது சமூக சேவையை கௌரவித்து சமாதான நீதவான், எம்.சி.சித்திலெப்பை ஞாபகார்த்த 'ரத்ன தீபம்'விருது மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற விருதுகளுடன் பிரதேச விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதே போன்று மருதமுனை 4 ஜி ஹேன்ட்லூம்(4G HANDLOOM) முகாமைத்துவப் பணிப்பாளர் என்ற வகையில் பதுறுஸ்மான் பஹத்ஸமான் கிழக்கு மாகாணத்தில் சிறந்த கைத்தறி உற்பத்தி தொழில் முயற்சியாளருக்கான விருதைப் பெற்றார். கிழக்கு மாகாண கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலில் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண தொழில் முயற்சியாளர்களுக்கான விருது வழங்கிய நிகழ்வு அண்மையில் சாய்ந்தமருது லீமெரிடியன் மண்டபத்தில் நடைபெற்றது.

இவரது பரம்பரையாக முப்பாட்டன் அப்துல் காதர் அஹமது லெப்பை, பாட்டன் அஹமது லெப்பை அபுபக்கர், தந்தை அபுபக்கர் பதுறுஸ்மான் ஆகியோரை அடியொற்றி பதுறுஸ்மான் பஹத்ஸமான் தனது முன்னோர் செய்த பணியை செய்து வருகின்றார். பலர் இத்தொழிலை கைவிட்டு வருகின்ற போதிலும் பஹத்ஸமான் துணிச்சலுடன் பல சவால்களை எதிர்கொண்டு இத்தொழிலை முன்னெடுத்து வருகின்றார்.

கடந்த காலங்களில் மருதமுனை பிரதேசத்தில் எங்கு பார்த்தாலும் கைத்தறிச் சத்தம் தான் கேட்கும். குடும்பத்தில் எல்லோரும் இணைந்து இந்த தொழிலைச் செய்து வந்தனர். ஆனால் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அநேகமானவர்கள் செல்லத் தொடங்கியதும் நெசவுத் தொழிலாளர்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது. அதனால் இத்தொழிலும் மங்கிச் செல்கின்றது.



**பி.எம்.எம்.ஏ.காதர்...✍**
**(மருதமுனை தினகரன் நிருபர்)**



தமிழ் பத்திரிகை ஜாம்பவான் எஸ். டி.சிவநாயகத்தின் ஜனன தின நூற்றாண்டு (1921-2021) விழாவும், ஞாபகார்த்த முத்திரை வெளியீடும் நேற்று மாலை ஸ்ரீ சத்ய சாயி, சீரடி பாபா (கொழும்பு) மத்திய நிலையத்தின் அறங்காவலரும் தலைவருமான எஸ். என். உதயநாயகம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் பி. இராதாகிருஷ்ணன், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் மற்றும் பிரமுகர்களுக்கு முதல்நாள் ஞாபகார்த்த முத்திரை உறை வழங்கப்படுவதையும் கலந்து கொண்டோரையும் காணலாம்.

## 60 பேர் கொண்ட 09 விசேட பொலிஸ்...

உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்கிரமவின் இல்லத்துக்கு தாக்குதல் நடத்திய குழுவினர், வாகனங்களில் வருகை தந்தமை, தாக்குதல் நடத்திய பின்னர் தப்பிச் சென்ற வீதிகள் தொடர்பில் தகவல்களைக் கண்டறிய சி.சி.ரி.வி காணொளி காட்சிகளை ஆய்வுக்குட்படுத்துவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வாகனம் ஸ்பேசியா வகையை ஒத்ததாக உள்ளதென, சி.சி.ரி.வி காணொளிக் காட்சிகளை ஆராய்ந்ததன் அடிப்படையில் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, சி.சி.ரி.வி காணொளிக் காட்சிகள், மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. சம்பவம் தொடர்பில், 26 சி.சி.ரி.வி காணொளிக் காட்சிகளை, விசாரணை அதிகாரிகள் நேற்று முன்தினம் வரையில் ஆய்வுக்குட்படுத்தியுள்ளனர்.

இக் குழுவினர் தாக்குதல் நடத்துவதற்காக, கொழும்பிலிருந்து பிலியந்தலை சந்திவரை பயணித்துள்ளமை இதனூடாக கண்டறியப்பட்டுள்ளது.அவர்கள் பயணித்த வாகனம் பிலியந்தலை விகாரைக்கருகில் மீண்டும் திரும்பி ஜாலியகொட சந்தி ஊடாக பயணிப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

## புகையிரத சேவைகள்...

தம்மிக ஜயசுந்தர தெரிவிக்கையில்,

இந்தியாவின் நிதியுதவியுடன் மேற்படி ரயில் பாதை புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகவும் மார்ச் 05 ஆம் திகதிக்குப் பின்னர் வடக்குக்கான ரயில் சேவை கொழும்பிலிருந்து அநுராதபுரம் வரை மட்டுப்படுத்தப்படுமென்றும், பயணிகளின் நலனைக் கருத்திற்கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி வரை விசேட ரயில் சேவை நடைபெறுமென்றும் அவர் தெரிவித்தார்.

இக்காலத்தில் அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் வரை விசேட பஸ் சேவைகள் நடைமுறைப்படுத்தப்படுமென்றும் அந்த பஸ் சேவை ரயில் நிலையத்திலிருந்து ஆரம்பிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் 1.5 பில்லியன் செலவில் மஹவ தொடக்கம் ஓமந்தை வரையிலான ரயில் பாதை புனரமைக்கப்படும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வடக்குக்கான ரயில்சேவை கொழும்பிலிருந்து அநுராதபுரம் வரை நடைமுறையிலிருக்குமென்றும் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி வரை மற்றுமொரு ரயில் சேவை நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

# 70 வயதில் முதுநிலை பட்டம் பெற்ற முதியவர்



யாழ்ப்பாணத்தில் 70 வயதில் நபர் ஒருவர் முதுநிலை பட்டம் பெற்று சாதனை படைத்துள்ளார். இதற்கு பெரும்பான்மையான சிங்கள மக்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த நபர் ஒருவர் தனது 70ஆவது வயதில் பட்டம் பெற்றதை அவரது மகன் தனது முக நூலில் பதிவிட்டுள்ளார்.

“எனது தந்தை தனது 70ஆவது வயதில் M.P.A பட்டம் பெற்றுள்ளார்” என மகன் பதிவிட்டுள்ளார்.

வைத்தியரான மகனின் முகநூல் பக்க பதிவை சிங்கள முக நூல் பக்கங்கள் மீள் பதிவு செய்து வெளியிட்டுள்ளன. அத்துடன் கல்விக்கு வயதில்லை என்பதனை அவர் உண்மையாக்கியுள்ளார் என பலரும் 70 வயதான முதயவரை பாராட்டியுள்ளனர்.

எனினும் இந்த கற்கையின் பெறுமதியை இன்றைய காலப்பகுதியினர் மதிக்காமல் பணம் செலுத்தி பட்டங்களை பெற்றுக் கொள்வதாக பலரும் குறிப்பிட்டுள்ளனர்.

அதன் மதிப்பை உணர்ந்தவர் வயதை பொருட்படுத்தாமல் சாதித்து காட்டியுள்ளாரென பதிவிட்டுள்ளனர்.

## தேசிய கைத்தொழில் வல்லுநர்களுக்கு...

போது ஜனாதிபதியினால் பிளாட்டினம் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பாரிய, நடுத்தர மற்றும் சிறு அளவிலான 20 துறைகளுக்கு, தங்கம், வெள்ளி மற்றும் வெண்கல விருதுகள் வழங்கப்பட்டன.

மோட்டார் வாகனங்களை ஒன்று சேர்க்கும் கைத்தொழிலை ஊக்குவிக்கும் வகையில், அத்துறையைச் சேர்ந்த கைத்தொழில் வல்லுநர்கள் மூவர் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் மூன்று, இதன்போது சிறப்புப் பாராட்டுக்கான விருதுகளைப் பெற்றன.

நமது உற்பத்திகளுக்கு முன்னுரிமையளிக்கும் பயணத்துக்கான நம்பிக்கை வைத்தே, ஜனாதிபதி அதிகாரத்துக்குக் கொண்டுவரப்பட்டரென்றும் எதிர்காலத்திலும் அந்த நம்பிக்கையுடன் நடவடிக்கைகளை முன்னெடுத்து, தேசிய கைத்தொழிற்றுறையை மேம்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்துக்குள்ளதென்றும் தெரிவித்த கைத்தொழிற்றுறை அமைச்சர் விமல் வீரவங்ச, தேசிய கைத்தொழில்கள், முன்னரை விட தற்காலத்தில் புத்துயிர் பெற்று வருகின்றன என்றார்.

தேசிய கைத்தொழிலாளர்களுக்கு தற்போதைய சவால் ஆசீர்வாதமாக அமைந்துள்தென்றும் தொழில் முயற்சிகள் கட்டியெழுப்பப்படும்போது தேசிய கைத்தொழில்கள் மேம்படுவதால் கிடைக்கும் பொருளாதாரத்திலிருந்து அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணக் கூடியதாக இருக்குமெனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்த பௌத்த தேரர் பொலிசாரால் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

க.பொ.த.உயர்தரப் பரீட்சை நடைபெற்று வரும் நிலையில் முறைகேடான விதத்தில் செயற்படும் பரீட்சாத்திகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல். எம்.டீ. தர்மசேன தெரிவித்துள்ளார்.

இம்முறை பரீட்சையின் போது ஒரே ஒரு முறைகேடான சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்த அவர் அது தொடர்பில் பௌத்த தேரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.மேற்படி தேரர் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டுள்ள மற்றொரு தேரருக்குப் பதிலாக போலி தகவல்களை வழங்கி பரீட்சைக்குத் தோற்றியுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.(ஸ)

## கிழக்கில் தனித்து...

மண்டபத்தில் நடைபெற்றது.இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கல்முனைத் தொகுதி அமைப்பாளர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எஸ். அப்துர் ரஸ்ஸாக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் தொழில் சங்கத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான முஜீபுர் ரஹ்மான், கட்சியின் கிழக்கு மாகாண அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான இம்ரான் மஹ்றூப், பிரதி தேசிய அமைப்பாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான புத்திக பத்திரன மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரதாச கலப்பதி உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார மேலும் தெரிவிக்கையில்;

இனிவரும் காலங்களில் ஐக்கிய தேசிய கட்சி விட்ட தவறுகளை ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் செய்யமாட்டாது. நாட்டிலுள்ள 160 தொகுதிகளுக்கும் அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அந்தந்த தொகுதி அமைப்பாளர்களே பொதுத் தேர்தலில் வேட்பாளர்களாக நியமிக்கப்படுவர். கட்சி சம்பந்தப்பட்ட எந்த வேலைத் திட்டமாயினும் அமைப்பாளர் ஊடாகவே முன்னெடுக்கப்படும்.

கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்ற கட்சிகள் எம்முடன் இணைந்து எமது வேட்பாளர் பட்டியலில் போட்டியிட்டு, எமது ஆதரவாளர்களினதும் வாக்குகளைப் பெற்று, வெற்றி பெற்ற பின்னர் அவர்கள் அரசாங்கத்தில் இணைந்து விடுகின்றனர். இதனால் பாராளுமன்றத்தில் எமது கட்சியின் பலம் மலினப்படுத்தப்படுகிறது. மாற்றுக் கட்சியினருக்கு வாய்ப்பளிப்பதால் எமது கட்சி ஆதரவாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். இது பற்றி இங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

இனிவரும் எந்தவொரு தேர்தலிலும் இவ்வாறான தவறுகள் நடக்க இடமளிக்க மாட்டோமென்று உறுதியளிக்கிறேன். இது விடயத்தில் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச மிகவும் உறுதியாக இருக்கிறார் என்றார்.

## முதல் தடவையாக... 03ஆம் பக்கத் தொடர்

கிராமங்களுக்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து கிராமங்களையும் அபிவிருத்தி செய்வது இதன் நோக்கமாகும்.

முயற்சியுள்ள அனைத்து பிரஜைகளையும் பலப்படுத்தும் வகையில் இந்த வரவு செலவுத்திட்டம் மூலம் நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

## யாழில் பயங்கரவாத... 03ஆம் பக்கத் தொடர்

உள்ளூராட்சி சபைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள், மணிவண்ணன் ஆதரவு உறுப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு கையெழுத்துக்களை பதிவு செய்திருந்தனர்.

## சடலங்கள் மீதான கட்டாய...

அதன்படி நாடு முழுவதுமுள்ள வைத்தியசாலைகளில் அல்லது வெளியில் இடம்பெறும் மரணங்கள் தொடர்பில் இதுவரை கட்டாய பி.சி. ஆர். பரிசோதனை நடைமுறையிலிருந்து வந்த போதும் அந்த பரிசோதனை நடைமுறை நீக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவ்வாறான மரணங்கள் ஏற்படும்போது பிரேத பரிசோதனை தொடர்பான சட்ட மருத்துவ அதிகாரியின் தேவைக்கேற்ப மட்டும் பி.சி. ஆர். பரிசோதனை செய்ய முடியுமென்றும் அந்த புதிய வழிகாட்டலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனையில் மரணித்துள்ள நபர் கொரோனா வைரஸ் தொற்று நோயாளரென உறுதிப்படுத்தப்பட்டால், அவரது இறுதி மரணச் சடங்குகள் தற்போது நடைமுறையிலுள்ள சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றியே மேற்கொள்ளப்படுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மரணிப்போரின் சடலங்களை தகனம் செய்வது தொடர்பாக சுகாதார அமைச்சினால் ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்த சுற்றறிக்கை தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சடலங்கள் மீதான பிசிஆர் பரிசோதனை தொடர்பில் தற்போது வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்தின் பிரதிகள் நீதியமைச்சர், சுகாதார அமைச்சர், சட்ட மாஅதிபர், பொலிஸ் மாஅதிபர் மற்றும் பதிவாளர் நாயகம் உள்ளிட்ட அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நாட்டின் தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக குறிப்பிட்டுள்ள அவர்,மக்கள் தொடர்ச்சியாக சுகாதார வழிமுறைகளை முறையாகப் பின்பற்றுவது அவசியம் என்றும் தெரிவித்துள்ளார். (ஸ)

## சிறிசேனவும் ரணிலும்... 03ஆம் பக்கத் தொடர்

நடவடிக்கைகள் மாத்திரம் போதுமானவயென கருதினர். நிலைமாற்றுக்கால நீதி தொடர்பான தங்கள் கடப்பாடுகளை நிறைவேற்ற முன்வரவில்லை.

முன்னைய அரசாங்கத்துடனான எனது அனுபவங்கள் குறித்தும் நான் விசேட அறிக்கையாளராக இருந்த வேளை, அரசாங்கங்களுடனான எனது அனுபவம் குறித்தும் கருத்துக்களை பகிர்ந்துகொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.அரசாங்கங்கள் எப்போதும் ஒற்றை கல்லால் உருவானவையில்லை, சிறந்த எண்ணப்பாங்குகளும் ஆழமான எதிர்ப்புணர்வுகளும் கொண்டவை.

## நீராடச் சென்ற இரு...

சிறுமிகள் குளிப்பதற்குச் சென்றுள்ளனர்.நால்வரும் நீரில் மூழ்கியதை அப்பகுதி மக்கள் அவதானித்துள்ளனர். பின்னர் பிரதேசவாசிகளால் மாணவிகள் மீட்கப்பட்டதுடன், ஆபத்தான நிலையிலிருந்த மூன்று மாணவிகளும் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இரு மாணவிகள் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இரண்டு சிறுமிகளின் சடலங்களும் குருநாகல் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், குருநாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## “ஒரேநாடு – ஒரே சட்டம்” செயலணி...

உள்ளடக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பில் கவனத்தில் கொண்டு, ஜனாதிபதியின் நோக்கத்தை அடைவதற்கு தங்களாலான ஒத்துழைப்புகளை வழங்குவதாக, அமைச்சர்கள் தெரிவித்தனர்.

“ஒரே நாடு – ஒரே சட்டம்” தொடர்பான ஜனாதிபதி செயலணியினர், நீதி அமைச்சர் அலி சப்ரி, வெளிநாட்டமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேக்கர ஆகியோரை கடந்த சில தினங்களில் சந்தித்து, செயலணியின் கடந்த கால மற்றும் எதிர்கால வேலைத் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடிய போதே, அமைச்சர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இனம் அல்லது மதம் சார்ந்த குழுக்களாக இணைந்து, பிறிதோர் இனத்தைச் சார்ந்தவர்களை வித்தியாசமாக நடத்தக் கூடாதென்று தெரிவித்த ஜனாதிபதி செயலணியினர், ஜனாதிபதியிடம் “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள “ஒரே நாடு – ஒரே சட்டம்” எண்ணக்கருவைச் செயற்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றி விவரித்தனர். இது வரையில் நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்பட்ட கருத்தறிதல் மற்றும் கொழும்பு பண்டாநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சாட்சியப் பதிவுகள் தொடர்பிலும், அமைச்சர்கள் மூவருக்கு இதன்போது தெளிவுபடுத்தப்பட்டது.

நீதித்துறையில் நீதி நிர்வாகத்தை விரைவுபடுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள டிஜிட்டல் மயமாக்கல் வேலைத்திட்டம், புதிய நீதிக்கட்டமைப்பு, நீதி அமைச்சினால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய சட்டமூலங்கள் தொடர்பான தகவல்களை, நீதி அமைச்சர் அலி சப்ரி, செயலணியிடம் கையளித்தார்.அத்துடன், நீதி அமைச்சர் அலி சப்ரியின் அழைப்பின் பேரில், வக்பு சபையின் தலைவரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தார்.

வக்பு சபை தொடர்பில் பொது மக்களால் செயலணியிடம் முன்வைக்கப்பட்ட சிக்கல்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வெளிநாட்டமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது, அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கைகள் மற்றும் எதிர்காலத்தில் அரசாங்கம் கலந்துகொள்ளவுள்ள சர்வதேச மாநாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

பிரிவினைவாதம் தோற்கடிக்கப்பட்டு, ஒரு நாடாக இலங்கை ஒன்றிணைக்கப்பட்டுள்ளதையடுத்து, மீண்டும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுவதற்கு ஏதேனும் காரணிகள் தோன்றுமாயின் அவற்றை முறியடிப்பதன் முக்கியத்துவம் பற்றி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருடனான சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது.

## பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு...

தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டும் அல்லது எரிபொருளுக்கான வரிச்சலுகைகளை வழங்க வேண்டுமென நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக கூட்டுத்தாபனத்தின் தலைவர், சட்டத்தரணி சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழலில் எரிபொருளின் விலை தொடர்ந்தும் இவ்வாறு பேணப்படுமாயின், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பாரிய நட்டத்தை எதிர்நோக்க வேண்டியேற்படுமென எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

டொலர் பற்றாக்குறையினால் எதிர்காலத்தில் நாட்டின் எரிபொருள் விநியோகம் நெருக்கடிக்குள்ளாகுமென எரிசக்தி அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.இதனை கருத்திற்கொண்டு எரிபொருள் மீதான வரியை குறைக்குமாறு அல்லது எரிபொருள் விலை அதிகரிப்பை துரிதப்படுத்துமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.




## அக்கரப்பத்தனை, டயகம பகுதிகளில் மூன்று கோயில்கள் உடைக்கப்பட்டு கொள்ளை

**தலவாக்கலை குறூப் நிருபர்**



அக்கரப்பத்தனை, டயகம பகுதிகளில் தொடர்ச்சியாக இந்து ஆலயங்கள் உடைக்கப்பட்ட சம்பவங்கள் அதிகமாக பதிவாகி வருகின்ற நிலையில் நேற்று அதிகாலை மூன்று கோயில்கள் உடைக்கப்பட்டு நகைகள் களவாடப்பட்டுள்ளன.

அக்கரப்பத்தனை கிளாஸ்கோ வல்லடையான் கோயில், மோனிங்டன் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் மற்றும் கிளபோர்க் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் ஆகியனவே இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு உண்டியல்களிலுள்ள பெருந்தொகையான பணமும் இறைவனுக்கு அணிவிக்கப்பட்டிருந்த தங்க நகைகளும் களவாடப்பட்டுள்ளன.

அத்தோடு இக்கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடைய நபர் ஒருவர் டயகம மோனிங்டன் மேல்பிரிவு தோட்டத்தில் வைத்து நேற்றுக் காலை பொதுமக்களால் சுற்றிவளைக்கப்பட்டு டயகம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை டயகம மற்றும் அக்கரப்பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பதுளை மாவட்டத்தில் 7953 அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுக்க திட்டம்

**பதுளை தினகரன் விசேடநிருபர்**

நாட்டின் ஒரு இலட்சம் வேலைத்திட்டத்தின் கீழ் பதுளை மாவட்டத்தில் 7953 அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனை பதுளை மாவட்ட அரசஅதிபர் தமயந்தி பரணகம தெரிவித்தார்.

அரசின் ஒரு இலட்சம் வேலைத்திட்டத்தின் பிரகாரம் பதுளை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் குறித்து பதுளை மாவட்ட அரசஅதிபர் தமயந்தி பரணகமயிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து அவர் கூறுகையில், 'உட்கட்டமைப்பு அபிவிருத்தி, வாழ்வாதார, அபிவிருத்தி, சமூகநலன்புரி சுற்றுச்சூழல் அபிவிருத்தி போன்ற வேலைத்திட்டங்களுக்கு 3720 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வகையில் பதுளை மாவட்டத்தின் 567கிராம சேவைப்பிரிவுகள் உள்ளன. அவற்றிற்கு தலா மூன்று மில்லியன் ரூபா என்ற அடிப்படையிலும் பிரதேச சபைகள் போன்ற உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு தலா நான்கு மில்லியன் ரூபா என்ற அடிப்படையிலும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களுக்கு தலா இருபது மில்லியன் ரூபா என்ற அடிப்படையிலும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா 100 மில்லியன் ரூபா என்றஅடிப்படையிலும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 150 மில்லியன் ரூபா என்ற வகையில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.



## மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் மாசி மக மகோற்சவ பஞ்சரத பவனி

**மாத்தளை சுழற்சி நிருபர்**

வரலாற்று சிறப்புமிக்க மாத்தளை அருள் மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த மாசி மக மகோற்சவ பஞ்சரத பவனி 17 இன்று வியாழக்கிழமை இடம்பெறும். இத் தேர்த் திருவிழா இம்முறை நாட்டில் சூழ் நிலைக்கேற்ப நடைபெறவுள்ளதாக ஆலய அறங்காவலர் சபை தலைவர் விக்னேஸ்வரன் சர்வானந்தா தெரிவித்தார்.



மாசி மக மகோற்சவ பஞ்சரத பவனி பகுதியில் இன்று காலை 11 மணியளவில் சுவாமிகளுக்கு பிரதிஷ்டை செய்யப்பட்டு அதன் பின்னர் மாலை 3 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்து சுவாமிகளுக்கு அர்ச்சனைகள் இடம்பெற்று மாலை 6 மணிக்குப் பின்னர் பஞ்சரத பவனி நகர் வலம் வரும்.பஞ்சரத பவனி மறுநாள் 4:30 மணிக்கு மீண்டும் ஆலயத்தை வந்தடையும்.

சுகாதார விதிமுறைகளுக்கு அமைய மூன்று கொரோனா தடுப்பு ஊசிகளையும் பெற்றுக் கொண்ட அடியார்கள் 100 பேர் மாத்திரமே ஒரே நேரத்தில் ஆலயத்திற்குள் அனுமதிக்கப் படுவார்கள்.

அடியார்கள் அனைவரும் தடுப்பூசிகளை ஏற்றுக் கொண்டார்கள் என உறுதி செய்யப்பட்டு அதற்கான அட்டையும் வழங்கப்பட்டுள்ளது.

தேர்வீதி உலாவின் போது வீதி ஓரங்களில் இருந்து பூஜை தட்டு வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளதுடன் அர்ச்சனைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இது தவிர வெளியூர் அடியார்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். கடந்த வருடங்களை போன்று இம்முறை காவடி ஊர்வலம் மற்றும் கற்பூர சட்டி ஊர்வலம் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் பால்குட பவனி, கற்பூர கட்டி என்பன ஆலய வளாகத்தை சுற்றி இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

## இந்திய உதவித் தூதுவரிடம் மலையகம் பற்றிய நூல் கையளிப்பு



**அக்குறணை குறூப் நிருபர்**

இலக்கிய விமர்சகரும் நூல் வெளியீட்டாளருமான கண்டி, இரா.அ. இராமன் மலையத் தமிழர்கள் பற்றிய சிறுகதை நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இவர் இதனை கண்டி உதவி இந்தியத் தூதுவரும் விசேட வைத்திய நிபுணருமான கையளித்த போது எடுக்கப்பட்ட படம்.

கண்டி வாவிக்கரையில் உள்ள இந்திய உதவித் தூதுவரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நடந்த ஒரு சந்திப்பின் போது அவர் இதனை கையளித்தார்.



மாத்தளைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு (14) வருகை தந்த கண்டியிலுள்ள இந்திய உதவித் தூதுவர் டாக்டர் ஆதிசா மாத்தளை மாநகர சபை முதல்வரால் வரவேற்கப்பட்டார்.

படம்: மாத்தளை சுழற்சி நிருபர்

## 37வயதான குடும்பஸ்தர் விஷம் அருந்தி தற்கொலை

**தெல்தோட்டை தினகரன் நிருபர்**

புப்புரஸ்ஸ பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஸ்டெலன்பேர்க் வீடொன்றின் தோட்டத்தில் 37வயதான குடும்பஸ்தர் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

குடும்பத் தகராறு காரணமாக. ஒரு மாத காலத்திற்கு முன் இவரின் மனைவி தனது இரண்டு பிள்ளைகளுடன் வீட்டை விட்டு சென்றுள்ளார்.

இவர்களைத் தேடிப் பார்த்த கணவன் எங்கும் மனைவி, பிள்ளைகள் கிடைக்காததால் நீண்ட நாட்களாக மனமுடைந்த நிலையில் இருந்துள்ளார்.

தனிமையில் வாழ்ந்த இவர் நேற்றுக்காலை வீட்டை விட்டு வெளியில் வராததால் இவரின் உறவினர்கள் சென்று பார்த்த போது சோபாவில் அமர்ந்தவாறு இறந்து கிடந்துள்ளார்.

புப்புரஸ்ஸ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கற்குகைகளில் வாழும் சிறுத்தைகளால் மக்கள் அச்சம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

பலாங்கொடை சமனலவத்த பிரதேசத்தில் சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் மக்கள் தாம் அச்சத்தால் உறைந்து போயுள்ளதாக தெரிவிக்கின்றனர். அடர்ந்த வனங்களால் சுற்றியுள்ள சமனலவெவ பிரதேசத்தை நோக்கி இவ்வனங்களின் கற்குகைகளில் வாழும் சிறுத்தைகள் இரைதேடி வருவதால் இந்நிலைமைஏற்பட்டுள்ளதாக இவர்கள் தெரிவிக்கின்றனர். இம்மக்களின் குடியிருப்புக்களை நோக்கி வரும் சிறுத்தைகள் இவ்வீ டுகளில் வளர்க்கபபடும் பிராணிகளான ஆடுகள், கோழிகள், நாய்கள் போன்றவற்றை இரையாக உட்கொள்கின்றன.இரவு பகலாக இந்த அச் சுறுத்தல் நிலவுவதால் தமது சிறிய குழந்தைகள் விடயத்தில் மிகுந்த அவதானம் செலுத்தவேண்யுள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.



சமூக சேவையாளர் சந்திரகுமாரின் நிதியில் அக்கரப்பத்தனை லோவகிரன்ட்லி பாடசாலையில் கல்வி கற்கும் தரம் 5 மாணவர்களுக்கு இலவசமாக தரம் 5 புலமைப்பரிசில் வழிகாட்டி நூல்கள் வழங்கி வைக்கப்பட்டன. அத்தோடு 25 வருட அரச சேவையை பூர்த்தி செய்ய அப்பாடசாலையின் அதிபர் தேசபந்து பாலகிருஸ்ணன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். பாடசாலை நிர்வாகத்தினரால் சமூக சேவையாளர் சந்திரகுமாருக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சமூக சேவையாளர் சந்திரகுமார், பாடசாலையின் அதிபர் தேசபந்து பாலகிருஸ்னன், அக்கரப்பத்தனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பலர் கலந்துக்கொண்டனர்.

தலவாக்கலை குறூப் நிருபர்


திகதி 15.02.2022
செவ்வாய்க்கிழமை www.nlb.lk
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4679
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 13,163,800.00
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 1 8 6 1 9 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 44,014,273.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2974
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 6,289,200.00
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 37 45 49 52
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 65,721,642.80

Mega POWER மெகா பவர் கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1027
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,613,240.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 236,103,682.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து C
சுப்பர் இலக்கம் 11
வெற்றி இலக்கங்கள் 05 15 27 67

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 709
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,782,980.00
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 13 38 41 61
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 97,583,122.00

NLB ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0020
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,146,060.00
இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 05 33 36 41
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 2,504,555.32

சேவன
சீட்டிழுப்பு இலக்கம் :356
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,242,020.00
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 10 12 76 91
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 14,336,154.40

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416


## மலையகத்தில் தொடரும் கோயில் உடைப்பு

**நுவரெலியா தினகரன் நிருபர்**



நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக கோயில்கள் உடைக்கப்படுகின்ற சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இந் நிலையில் இது தொடர்பாக இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை. இதன் மூலம் தெரிய வருவதாவது விசாரணைகள் மந்த கதியில் நடைபெறுகின்றன என்பதே ஆகும். இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார். இவர் உடன் நடவடிக்கை எடுக்குமாறு பிரதி பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக கோயில் உடைப்பு சம்பவங்கள் பதிவாகிவருகின்றன. நேற்று முன்தினம் அக்கரபத்தனை டயகம பகுதிகளில் சுமார் 5 கோயில்கள் உடைக்கப்பட்டுள்ளன.

அந்த கோயில்களில் இருந்த உண்டியல்கள் களவாடப்பட்டுளளன. அதே போல இறைவனுக்கு அணிவிக்கப்பட்டிருந்த நகைகளும் கலவாடப்பட்டுள்ளன. இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நுவரெலியா மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பிரசாத் ரணசிங்ஹவிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளேன்.அவரும் குறித்த பகுதிக்கு விசேட பொலிஸ் குழு ஒன்றை அனுப்பிவைப்பதாக என்னிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களிலும் நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக கோயில்கள் உடைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக பொலிஸ் நிலையங்களிலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை. வெறுமனே முறைப்பாடுகளை மாத்திரம் பதிவு செய்து வைப்பதன் மூலம் எதுவும் நடைபெறாது. அது மாத்திரமன்றி கோயில் நிர்வாகத்தையும் மாத்திரமே விசாரணை செய்கின்றார்கள். எனவே சம்பவத்துடன் தொடர்புடையவர்களை இனம் காண்பதற்கு விசேட செயல்திட்டம் ஒன்றை பொலிசார் மேற்கொள்ள வேண்டும்.

இதை விடுத்து பொலிஸ் நிலையத்தில் இருக்கின்ற முறைப்பாட்டு புத்தகத்தின் பக்கங்களை நிரப்புவதால் ஒன்றும் நடைபெறாது. கோயில்கள் என்ற காரணத்தால் பொலிசார் அக்கரை இன்றி செயற்படுகின்றார்களோ என்ற சந்தேகமும் எழுகின்றது. எனவே இந்த விடயம் தொடர்பாக பொலிசார் அதிக கவனம் செலுத்து இந்த நாசகார செயலில் ஈடுபடுகின்றவர்களை உடனடியாக அடையாளம் கண்டு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam

## வல்லிபுர கோவிலில் 10 இலட்ச ரூபாய் பெறுமதியான சங்கிலிகள் அறுப்பு

வரலாற்று சிறப்புமிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழாவின் போது , ஐந்து பக்தர்களின் தங்க சங்கிலிகள் அறுக்கப்பட்டு களவாடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வல்லிபுர ஆழ்வாரின் வருடாந்திர மகோற்சவ தேர்த்திருவிழா நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

அதன் போது, ஆலயத்திற்கு வருகை தந்த பக்தர்களில் ஐந்து பேரின் தங்க சங்கிலிகள் அறுக்கப்பட்டு களவாடப்பட்டுள்ளது. அவ்வாறு அறுக்கப்பட்ட ஐந்து தங்க சங்கிலிகளும் 8 அரை பவுண் நிறையடைய சுமார் 10 இலட்ச ரூபாய் பெறுமதியானது என பொலிஸார் தெரிவித்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வெளிநாடு செல்வோருக்கான பிசிஆர் யாழ் போதனாவில் மீள ஆரம்பம்

யாழ். போதனா வைத்தியசாலையில் இடைநிறுத்தப்பட்டிருந்த பிசிஆர் பரிசோதனைகள் நேற்று முதல் மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக போதனா வைத்தியசாலை பணிப்பாளர் நந்தகுமாரன் தெரிவித்துள்ளார்.

வெளிநாடு செல்வோருக்கான பிசிஆர். பரிசோதனைகள் கடந்த வாரம் முதல் யாழ் போதனா வைத்தியசாலையில் இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட வந்த சுகாதார தொழிற்சங்கங்களின் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக வெளிநாடு செல்வோருக்கான பிசிஆர். பரிசோதனைகளை வைத்தியசாலையில் மேற்கொள்வதில் சிக்கல் காணப்பட்டமையால் இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்நிலையில் நேற்று முதல் மீளவும் வெளிநாடு செல்வோருக்கான பிசிஆர் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு



அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு சிலாவத்தை சமுர்த்தி வங்கியில் இடம்பெற்றுள்ளது,

ஜனாதிபதியின் சுபிட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தின் கீழ் நிதி அமைச்சின் 2022ம் ஆண்டுக்கான பாதீட்டின் மூலம் சமுர்த்தி பயனாளிகளுக்காக 28வீத அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி மானிய தொகை வழங்கும் நிகழ்வு நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றது.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் சமுர்த்தி பயனாளிகளுக்கான அதிகரிப்பு கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு (15) கரைதுறைப்பற்று பிரதேச செயலகர் பிரிவிற்குட்பட்ட சிலாவத்தை சமுர்த்தி வங்கியில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு குறித்த கொடுப்பனவுகளை வழங்கி வைத்தார்.

மேலும் இது போல மாவட்டத்தின் ஏனைய சமுர்த்தி வங்கிகளிலும் குறித்த கொடுப்பனவுகள் வழங்கும் செயற்பாடுகள் நேற்றிலிருந்து பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி தற்போதுவரையில் மூவாயிரத்து 500 ரூபாவைப் பெற்ற சமுர்த்தி பயனாளர் குடும்பம் ஒன்றுக்கு, நான்காயிரத்து 500 ரூபா கொடுப்பனவும், 2,500 ரூபா கொடுப்பனவைப் பெற்ற குடும்பத்துக்கு, 3,200 ரூபா கொடுப்பனவும், ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவைப் பெற்ற குடும்பத்துக்கு, ஆயிரத்து 900 ரூபா கொடுப்பனவும் வழங்கப்பட்டு வருகிறது.

இந் நிகழ்வில் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் மு.முபாரக், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ம.உமாமகள், நுண்நிதிப் பிரிவு முகாமையாளர், சமுர்த்தி வங்கி முகாமையாளர், உள்ளிட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## 6 மில்லியன் ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் இருவர் கைது



818 கிராம் ஐஸ் போதைப்பொருளை கடத்த முற்பட்ட குற்றச்சாட்டில் இருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். நெல்லியடி நகரம் பருத்தித்துறை வீதியில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இருவரும் கைது செய்யப்பட்டனர்.

காங்கேசன்துறை அந்தோனிபுரத்தைச் சேர்ந்த 33 வயதுடைய ஒருவரும் பருத்தித்துறையைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 818 கிராம் ஐஸ் போதைப்பொருளின் பெறுமதி 6 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## அடம்பன் குருவில் வான் பகுதியில் புதையல் தோண்டிய ஒருவர் கைது

(மன்னார் குறூப் நிருபர்)



அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருவில் வான் பகுதியில் புதையல் தோண்டிய ஒருவர் செவ்வாய்க்கிழமை(15) மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் இராணுவ புலனாய்வுத் துறையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து இராணுவம் மற்றும் அடம்பன் பொலிஸார் இணைந்து குருவில் வான் பகுதியில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன் போது குறித்த பகுதியில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு மேலும் ஆறு சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு தொகுதி பொருட்கள் இராணுவம் மற்றும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தற்போது அடம்பன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதோடு புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்ட பொருட்கள் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

தப்பியோடிய சந்தேக நபர்கள் 6 பேரை பொலிசார் தேடி வருகின்றனர்.

மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஒதியமலை மின்சார வேலியில் சிக்கி யானை உயிரிழப்பு!



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஒதியமலை கிராமத்தில் யானை ஒன்று மின்சாரவேலியில் சிக்கி உயிரிழந்துள்ளது.

விவசாய தோட்டம் ஒன்றிற்கு கட்டப்பட்ட மின்சார வேலியில் சிக்கி காட்டு யானை உயிரிழந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் சம்பவ இடத்திற்கு வருகைதந்து பார்வையிட்டுள்ளதுடன் ஒட்டுசுட்டான் பொலிசாரும் விசாரணை நடத்தியுள்ளார்கள்.

இதன்போது விவசாய தோட்டக் காணியின் உரிமையாளரான 46 அகவையுடைய பெண் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் யானை உயிரிழப்பு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

மின்சார வேலியில் தும்பிக்கையினை பிடித்தபடி யானை உயிரிழந்துள்ளது.

## பூநகரியில் பயணிகள் பஸ் தரித்து செல்ல நடவடிக்கை



முல்லைத்தீவு குறூப் நிருபர்

கிளிநொச்சி பூநகரி பேருந்து நிலையத்தில் ஏ32 சாலையில் பயணிக்கின்ற அனைத்து பேருந்துகளும் தரித்து செல்ல வேண்டும் என பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பூநகரி பேருந்து நிலையத்திற்கு நேற்று 15.02.2022 வருகை தந்த அமைச்சரிடமே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக ஏ32 சாலையில் பயணிக்கின்ற பேருந்துகள் கூடுதலாக பூநகரி பேருந்து நிலையத்தில் தரித்து செல்வதில்லை. இதன் காரணமாக பயணிகள் பாதிக்கப்படுகின்றனர். பேருந்து நிலையத்தில் பேருந்துகள் தரித்து செல்வதன் காரணமாக பெரும் பயன்கள் ஏற்படும்.

குறித்த பேருந்து நிலையத்திற்கும் முழங்காவில் பேருந்து நிலையத்திற்கும் அரச மற்றும் தனியார் பேருந்துகள் 10 நிமிடங்கள் தரித்து நின்று செல்வதை உறுதிப்படுத்துமாறு தவிசாளரினால் கோரிக்கை விடுக்கப்பட்டது. இவ்விடயத்தினை கேட்டறிந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதனை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு உத்தரவு பிறப்பித்தார்.





வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர் உற்சவம் செவ்வாய்க்கிழமை(15) இடம்பெற்றது. (கரவெட்டி தினகரன், நாகர்கோவில் விஷேட நிருபர்கள்)

## சீனியில் ஒரு வகையான இரசாயன பொருள் கலப்படம்

வவுனியா விசேட நிருபர்

வவுனியா, பஜார் வீதியில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிலையத்தில் விற்பனை செய்யப்பட்ட சீனி பையில் ஒரு வகையான இரசாயன பொருள் கலப்படம் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் பொதுமகன் ஒருவர் வவுனியா மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையில் முறைப்பாடு மேற்கொண்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா, பஜார் வீதியில் பொலிஸ் நிலையத்திற்கு பின்புறமாக அமைந்துள்ள பிரபல வர்த்தக நிலையத்தில் பொதுமகன் ஒருவர் அவ் வர்த்தக நிலையத்தினால் பொதியிடப்பட்ட சீனி பை ஒன்றினை கொள்வனவு செய்துள்ளார். வீட்டிற்கு சீனியினை எடுத்துச்சென்று அதனை பாவனைக்கு உட்படுத்திய சமயத்தில் அதனுள் ஓர் விதமான இரசாயன பொருள் கலந்துள்ளதினை அவதானித்துள்ளார். இதனையடுத்து வவுனியா மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையில் முறைப்பாடு மேற்கொண்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் வவுனியா மாவட்ட பாவனையாளர் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினரை தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு கேட்ட போது,

குறித்த வர்த்தக நிலையம் தொடர்பில் எமக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கிணங்க நாம் மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதாக தெரிவித்தனர். இவ்விடயம் தொடர்பில் குறித்த வர்த்தக நிலையத்தினை தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு கேட்ட போது,

சீனி பொதியிடும் சமயத்தில் குளிர்பானம் தயார் செய்ய பயன்படுத்தப்படும் சிற்றிக்கசிட் தவறுதலாக சீனியில் கலந்துள்ளது. தவறுக்கு வருந்துவதுடன் குறித்த சீனியினை பெற்றுக் கொண்டவர்கள் உடனடியாக எம்மிடம் அதனை மீள வழங்குமாறும் தெரிவித்தார்.

## உதவி அரசாங்க அதிபராக நியமனம்



**முள்ளிப்பொத்தானை குறூப், ரொட்டவெவ குறூப், கிண்ணியா மத்திய, தோப்பூர் குறூப் நிருபர்கள்**

திருகோணமலை மாவட்ட உதவி அரசாங்க அதிபராக எஸ். நிருபா நியமிக்கப்படுள்ளார். 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, நிர்வாக சேவை உள்ளக பயிற்சிகளை முடித்துக் கொண்டதன் பின்னர் இந்நியமனம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இலங்கை நிர்வாக சேவை மூன்றாம் தர உத்தியோகத்தரான இவர், இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் உணவு விஞ்ஞானமும் போசாக்கும் துறையில் ஆரம்ப பட்டத்தை பூர்த்தி செய்துள்ளார்.

## பிரதி திட்டமிடல் பணிப்பாளராக பதவி உயர்வு



**வரிப்பத்தான்சேனை தெற்கு குறூப் நிருபர்**

அம்பாறை உஹன பிரதேச செயலகத்தில் உதவி திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றும் எம்.எம்.முஹம்மட் சப்ரி பொது நிர்வாக அமைச்சின் செயலாளரது கடிதத்திற்கமைய பிரதி திட்டமிடல் பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

2013 ஆம் ஆண்டு இலங்கை திட்டமிடல் சேவையில் இணைந்து கொண்ட இவர்,

கோமரன்கடவெல, மஹாஓயா ஆகிய பிரதேச செயலகங்களில் உதவி திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றியுள்ளார்.

சாய்ந்தமருதுவை பிறப்பிடமாகக் கொண்ட இவர், ஓய்வு பெற்ற பிரதி கல்விப் பணிப்பாளர் முக்தாரின் புதல்வராவார். இவர் தனது ஆரம்பக் கல்வியை கல்முனை சாஹிரா கல்லூரியில் கற்றதோடு, பல்கலைக்கழக கல்வியை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தில் கற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் குரல்

### அம்பாறை மாவட்ட செயலகத்தில்

# எல்லை பிரச்சினைகளை தீர்க்கும் கலந்துரையாடல்

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் செய்கை பண்ண அனுமதி வழங்கப்படாத காணிப் பிரச்சினைகள் மற்றும் எல்லைப் பிரச்சினைகளை தீர்க்கும் முகமான கலந்துரையாடல் அம்பாறை மாவட்ட செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (15) நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் இராஜாங்க அமைச்சர் விமல வீர திஸாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான வீரசிங்க, எஸ்.எஸ்.எம். முஷாரப், திலக் ராஜபக்ஷ, மாவட்ட செயலாளர் ஜே.எம்.ஏ. டக்ளஸ்,பிரதேச செயலாளர்கள், நிலஅளவைத் திணைக்கள அதிகாரிகள், வனபரிபாலன திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இக்கலந்துரையாடலில் பொத்துவில் லாகுகலை எல்லைப்பிரச்சினை குறித்தும், பொத்துவில் கிரான்கோவை காணி சம்பந்தமாகவும், அக்கரைப்பற்று வட்டமடு காணியை செய்கை பண்ண விடுவிப்பது தொடர்பாகவும் ஆவணங்கள் முன் வைக்கப்பட்டு தெளிவு படுத்தப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் எல்லைகளுக்கிடைப்பட்ட பிரச்சினை குறித்தும் தொழில்நுட்ப ரீதியான பிணக்குகள் தொடர்பாகவும் விளக்கமளித்தார்.

நிலஅளவைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திதுடன் கலந்துரையாடல் நடாத்தி இறுதி தீர்மானங்களை மேற்கொள்வதாக இக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டதாக, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

இது தொடர்பாக காணி உரிமையாளர்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டு, குறித்த பகுதிகளுக்கு களவிஜயம் மேற்கொண்டு இவற்றிக்கான தீர்வும் விரைவில் வழங்கப்படுமெனவும் பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் மேலும் தெரிவித்தார்.

## கல்முனை வடக்கில் 5995 சமுர்த்தி பயனாளிகளுக்கு அதிகரித்த கொடுப்பனவு

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

ஜனாதிபதியின் சுபிட்சத்தின் நோக்கு திட்டத்திற்கமைய சமுர்த்தி பயனாளிகளுக்கென அரசினால் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி மானியத் தொகையினை வழங்கி வைக்கும் ஆரம்ப நிகழ்வு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் தலைமையில் பெரியநீலாவணை கிராமத்தில் நடைபெற்றது.

கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கல்முனை, பாண்டிருப்பு, பெரிய நீலாவணை, துரைவந்தியமேடு, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை ஆகிய கிராமங்களில் 5995 குடும்பங்கள் சமுர்த்தி உதவிபெறும் குடும்பங்களாகவுள்ளனர். இக் குடும்பங்களுக்கென கடந்த காலங்களில் வழங்கப்பட்ட சமுர்த்திக் கொடுப்பனவு தற்போது அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவாக வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய கல்முனை வடக்கில் அதிகரிக்கப்பட்ட சமுர்த்திக் கொடுப்பனவாக வருடம் ஒன்றுக்கு 159 மில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது. கல்முனை வடக்கு மேற்கு வங்கிப் பிரிவினால் பெரியநீலாவணையில் ஆரம்பக் கொடுப்பனவு வழங்கி வைக்கப்பட்டன. இதற்கமைய கல்முனை வடக்கு மேற்கு வங்கியினால் 69 இலட்சத்து 64 ஆயிரத்து 400 ரூபா 3500 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் கல்முனை வடக்கு சமுர்தி பணிப்பாளர் வி.சிறிநாதன், கல்முனை, வடக்கு மேற்கு வங்கி முகாமையாளர் எஸ்.தவசீலன், மாவட்ட செயலகத்தின் சமுர்த்தி வங்கி மேற்பார்வை பிரிவு உத்தியோகத்தர் ரி.தெய்வேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## அதிகரித்த கொடுப்பனவு வழங்கி வைப்பு

**மருதமுனை தினகரன், பெரியநீலாவணை தினகரன் நிருபர்கள்**

சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கான கொடுப்பனவுகளை அரசாங்கம் அதிகரித்துள்ளது. அதிகரித்த கொடுப்பனவுகளை வழங்கும் நிகழ்வுகள் திங்கட்கிழமை (14) நாடு முழுவதிலும் உள்ள சமுர்த்தி வங்கிகள் ஊடாக சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.



இந் நிகழ்வு கல்முனை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மருதமுனை சமுர்த்தி வங்கியிலும் இடம் பெற்றது. மருதமுனை சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஏ.எல்.எம். நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கொடுப்பனவுகளை வழங்கி வைத்தார். சிறப்பு அதிதியாக கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம். சாலி கலந்து கொண்டார்.

கௌரவ அதிதியாக சமுர்த்தி மகா சங்க முகாமையாளர் எஸ்.எஸ்.பரீரா, அதிதிகளாக சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## ஸ்மார்ட்போன் துறையில் புரட்சியை ஏற்படுத்திய 5 vivo ஸ்மார்ட்போன்கள்



உலகளாவிய தூரநோக்கைக் கொண்ட தொழில்நுட்ப தரக்குறியீடான vivo, எப்போதும் தனது பயனர்களுக்கு முன்னுரிமை வழங்கி, புதுமையான அம்சங்கள் மற்றும் அனுபவங்களைக் கொண்ட உயர் மட்டத்திலான தயாரிப்புகளை அவர்களுக்கு வழங்க முயற்சித்து வருகிறது. அந்த வகையில், 2021 இல் 5 vivo ஸ்மார்ட்போன்கள் ஸ்மார்ட்போன் துறையில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளன.

*V21 5G*

vivo வின் V21 5G ஸ்மார்ட்போன், மிகவும் சக்திவாய்ந்த 44MP OIS Night Selfie System உடன் வருகிறது. 7.29mm தடிப்பு, Ultra Slim AG Design வடிவமைப்பு, முன், பின்புற கெமராக்கள் ஒரே நேரத்தில் ஒன்றாக இயங்கும் DualView Video அம்சத்தையும் இது கொண்டுள்ளது.

*V21e*

44MP Eye Autofocus போன்ற அற்புதமான அம்சத்துடன், vivo V21e ஆனது, எப்போதும் மிகத் தெளிவான செல்பிக்களை உருவாக்குகிறது. 7.38mm UltraSlim AG glass design, 6.44 அங்குல AMOLED திரை FHD+2400x1080 ultrahigh resolution உயர் தெளிவுத் திறனை இது கொண்டுள்ளது.

*Y53s*

vivo Y53s ஆனது, அனைத்து துறை அம்ச ஸ்மார்ட்போன் என்பதுடன், Y தொடரில் உயர்நிலை அம்சங்களை வழங்கும் முதலாவது ஸ்மார்ட்போனும் இதுவாகும். 64MP பின்பக்க கெமரா, 16MP முன்பக்க கெமராவுடன், 33W flash charge வசதி, 5,000mAh மின்கலம், 8GB + 4GB அதிகரிக்கப்பட்ட RAM மற்றும் 128GB உள்ளக நினைவகம், 1TB வரை விரிவாக்கம் செய்யும் Memory Card வசதிகளைக் கொண்டுள்ளது.

*Y12s*

Y12s ஆனது AI Dual Camera உடன், Face Beauty உள்ளிட்ட Filter களுடன், நாளாந்த புகைப்படத் தேவைகளுக்காக வடிவமைக்கப்பட்ட, பலதரப்பட்ட அம்சங்களைக் கொண்டுள்ளது. துல்லியமாக எடுக்கும் 13MP பின்புற பிரதான கெமராவுடன், multiTurbo 3.0 அம்சத்தையும் கொண்டுள்ளதால், விளையாட்டுகளின் போது ஏற்படும் தடங்கல்கள் மற்றும் பின்னடைவைக் குறைக்கிறது.

*Y1s*

Y1s ஆனது 6.22 அங்குல Halo FullView திரையைக் கொண்டுள்ளதுடன், வீடியோ, கேமிங் அனுபவத்திற்காக நீடித்த 4,030mAh மின்கலத்தையும் கொண்டுள்ளது. 3D வளைவுகளுடன், Y1s உங்கள் உள்ளங்கையில் வசதியாகப் பிடிப்பதற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. Y1s 2GB+32GB பதிப்பு ரூ. 24,990 எனும் விலையிலும், 3GB +32GB பதிப்பை ரூ. 27,990 எனும் விலையிலும் கிடைக்கிறது. அனைத்து சில்லறை விற்பனை நிலையங்களிலும் மற்றும் இணையவர்த்தக தளங்களான BuyAbans மற்றும் Daraz ஊடாகவும் கொள்வனவு செய்யலாம்.

# தினகரன் வர்த்தக உலா

சமன் பாதுமி

## கொக்கட்டிச்சோலை பாரம்பரிய அரிசி உற்பத்தியாளர்களுக்கு ஆதரவளிக்கும் கொமர்ஷல் வங்கி



மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் உள்ள விவசாயிகளுக்கு அவர்களது பாரம்பரிய அரிசி உற்பத்திக்குத் தேவையான நிதி உதவி, தொழில்நுட்ப ஆதரவு மற்றும் உபகரணங்கள் என்பனவற்றை கொமர்ஷல் வங்கி வழங்கி உள்ளது. வங்கியின் திரிஷக்தி பெறுமானத் தொடர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அண்மையில் இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கொக்கடிச்சோலையில் உள்ள மகளிர் அமைப்புக்களோடு இணைந்து சிறிய அளவிலான விவசாயிகள் மத்தியில் நிதி உட்பட்ட ஏனைய விடயங்களில் உதவும் இந்த நடவடிக்கையை கொமர்ஷல் வங்கி எடுத்துள்ளது. இந்தப் பிராந்தியத்தில் உற்பத்திக் கொள்ளளவை அதிகரித்து கிராம மட்ட வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும். இதன் ஒரு கட்டமாக தெரிவு செய்யப்பட்ட விவசாயிகள் மத்தியில் நெல்லை கொதிக்கவைக்கும் 30 கருவிகளை வங்கி பகிர்ந்தளித்துள்ளது. நெல்லை சேகரித்தல், பாரம்பரிய முறையில் அரிசி தயாரித்தல், அவற்றை உள்ளூர் சந்தைக்கு மற்றும் மட்டக்களப்பில் உள்ள தனிநபர்களுக்கு வழங்கல் போன்ற தொழில் பிரிவுகளைச் சார்ந்ததாகவே இவர்களின் வாழ்வாதாரம் அமைந்துள்ளது.

மகளிர் அமைப்புக்களுக்கு சமையல் உபகரணங்களைக் கையளித்த பின் கொமர்ஷல் வங்கியின் அதிகாரிகள் வங்கியின் செயற்பாடுகள், சேவைகள் மற்றும் உற்பத்திகள் பற்றி மேற்படி சமூகத்தவர்களுக்கு விரிவான விளக்கங்களை அளித்தனர்.

இந்த வைபவத்தில் உரையாற்றிய மகளிர் அமைப்பின் தலைவி திருமதி. பி.சகுந்தலா தேவி "வங்கியின் இந்த நடமாடும் சேவை ஊடாக கணக்குகளை திறத்தல், பண வைப்பீடு, மீளப்பெறல், நுண் கடன், விவசாயக் குத்தகை மற்றும் ஏனைய வங்கிச் சேவைகள் என விவசாயிகளுக்குத் தேவையான அடிப்படை வங்கி வசதிகளும் சேவைகளும் குறைந்த பட்சம் மாதத்தின் சில தினங்களுக்காவது வழங்கப்பட்டுள்ளன. இந்த சேவைகளைப் பெற்றுக் கொள்ள கிடைத்தமைக்காக நாம் நன்றி தெரிவிக்கின்றோம் என்றார்.

அதேபோல் முள்ளியவளை பிரதேசத்தில் கால்நடை பண்ணையாளர்கள் குழுவொன்றுக்கும் தேவையான குளிரூட்டல் பெட்டிகளையும் வங்கி வழங்கி உள்ளது.

கொமர்ஷல் வங்கி அதிகாரிகள் தமது சேவைகள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கின்றனர்.

## 'குடும்பச் சவாரி 15' தங்கம் மற்றும் பரிசுகளுக்காக செலிங்கோ லைஃப் காப்புறுதிதாரர்கள் தேர்வு

செலிங்கோ லைஃப்பின் மேலும் 176 காப்புறுதிதாரர்கள், ஆயுள் காப்புறுதித்; தலைவரின் 'குடும்பச் சவாரி' மெகா ஊக்குவிப்புத் திட்டத்தின் 15வது பதிப்பின் இரண்டாவது சீட்டிழுப்பில் தங்கம் மற்றும் பரிசு வவுச்சர்களை பெறுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டதன் ஊடாக அவர்களின் வாழ்க்கை மேலும் பிரகாசமாகியுள்ளது.



இம்முறை, குறித்த சீட்டிழுப்பின் அதிர்ஷ்டம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காப்புறுதிதாரருக்கு 1 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கத்தினை பரிசாக வழங்கியுள்ளது.

இதேவேளை, கந்தானை மற்றும் கம்பஹாவைச் சேர்ந்த இருவர் தலா 250,000 ரூபாய் பெறுமதியான தங்கத்தை வென்றனர். மேலும் இருபது வெற்றியாளர்கள் தலா ரூ.50,000 பெறுமதியான தங்கத்திற்கும், 50 வெற்றியாளர்கள் தலா ரூ.25,000 பெறுமதியான தங்கப் பரிசிற்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலதிகமாக 100 செலிங்கோ லைஃப் காப்புறுதிதாரர்கள் தலா ரூ. 10,000 மதிப்புள்ள பரிசு காசோலைகளுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பேருவளை, மொனராகலை, பதுளை, பன்னல மற்றும் தெஹியத்தகண்டிய உட்பட நாடளாவிய ரீதியில் வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலிகள், செலிங்கோ லைஃப்பின் 127 கிளைகளால் சேவையாற்றப்படுவதாக குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த மெகா ஊக்குவிப்புத் திட்டத்தின் சமீபத்திய பதிப்பின் மூன்றாவது சீட்டிழுப்பு 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

செலிங்கோ லைஃப் இந்த ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 1,000க்கும் மேற்பட்ட அதிர்ஷ்ட காப்புறுதிதாரர்களுக்கு 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத இறுதிக்குள் ரூ. 30 மில்லியன் தங்கம் மற்றும் பரிசு வவுச்சர்களை ஆறு குலுக்கல் மூலம் வழங்கும்.



கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீவெங்கடேஸ்வர மஹாவிஷ்ணு கோவில் மாசிமக மகோற்சவத்தில் ஸ்ரீமுத்துமாரியம்மன் தேரில் எழுந்தருளி பக்கதர்களுக்கு காட்சி கொடுத்த போது எடுக்கப்பட்ட படம். படம் வட கொழும்பு தினகரன் நிருபர்

# "கள் எலிய முஸ்லிம் கிராம வரலாறும் பரம்பரையும்" நூல் வெளியீட்டு விழா

எம்.வை.எ ம் நஸீர் எழுதிய "கள் எலிய முஸ்லிம் கிராம வரலாறும் பரம்பரையும்" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு கள் எலிய தௌபீக்ஸன்ஸ் வரவேற்பு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக புரவலர் ஹாசிம் உமர் கலந்து கொள்கிறார்.விசேட அதிதிகளாக பேராசிரியர் எம்.எஸ்.எம் அனஸ், முன்னாள் தலைவர் மெய்யியல் துறை பேராதனை பல்கலைக்கழகம், எம்.எம் முஹம்மத் (நளீமி) தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் ஆகியோர் கலந்து கொள்ளும் நிகழ்வில் கௌரவ அதிதிகளாக ஏ.எச்.எம் கலீல், எம்.ஏ.ஏ நூறுல்லாஹ் பங்கேற்கின்றனர். நூலின் விமர்சனத்தை எம்.எம் முஹம்மத் (நளீமி) மேற்கொள்கிறார்.

# சிரேஷ்ட ஊடகவியலாளர் சமன் சந்திரநாத் வீரசிங்கவின் இறுதி கிரியைகள் இன்று

**மொறட்டுவை மத்திய விசேட நிருபர்**

சிலுமின வாராந்த பத்திரிகையின் முன்னாள் இணை ஆசிரியரான சிரேஷ்ட ஊடகவியலாளர் சமன் சந்திரநாத் வீரசிங்கவின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு பொரல்லை கனத்தையில் நடைபெறும்.

இவர் தினமின, ஜனத்தா, புதுசரண ஆகிய பத்திரிகைகளின் பிரதி ஆசிரியராகவும் தினமின பத்திரிகையின் ஆசிரிய ஆலோசனை குழு உறுப்பினராகவும் டைம்ஸ் நிறுவனத்தின் லங்காதீப பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் இருந்து பத்திரிக்கை துறையில் அளப்பரிய சேவையை செய்த சமன் சந்திரநாத் வீரசிங்க மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

கலை துறைக்கு செய்த பங்களிப்புக்காக மாதிய பூஷண கௌரவ விருது, கலா கீர்த்தி மாதிய ஸூரி போன்ற கௌரவ விருதுகளையும் பெற்றுக் கொண்டவர். பூதவுடல் மொறட்டுவை, லக்ஷபத்தி பொன்சேகா வீதி இலக்கம் 60 யிலுள்ள அன்னாரது இல்லத்தில் வைக்கப்பட்டு, நேற்று காலை 10 மணி முதல் பொரல்லை ஜயரத்ன மலர் சாலையில் ரெஸ்பெக்ட் மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்று மாலை 4 மணிக்கு இறுதிக்கிரியைகள் பொரல்லை கனத்தையில் நடைபெறும்.

# வெளிநாடுகளில் அபராதம் விதிக்கப்படும் சீன வங்கிகள் நிதிச் சட்டங்களை முறையாக பின்பற்றுவதில்லையாம்

வெளிநாடுகளில் நிதி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் சீன வங்கிகள் அந்நாடுகளில் காணப்படும் நிதி மற்றும் வங்கிச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் மற்றும் கண்காணிக்கும் சட்டங்களை பொருட்டாக கொள்வதில்லை என்றும் நிதிச் சலவையில் ஈடுபடுவதோடு பயங்கரவாதிகளுக்கு நிதி சென்றடைவதற்கான வாய்புகளை ஏற்படுத்தித் தருவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

அமெரிக்காவைத் தளமாகக்கொண்ட நிதி கண்காணிப்பு நிறுவனமான எப்.ஏ.டி. எப், சீனாவில் காணப்படும் பணச் சலவை மற்றும் பயங்கரவாதத்துக்கு எதிரான நிதியொதுக்கீடுகள் தொடர்பான சட்டங்களில் பல ஓட்டைகள் காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளது. சீனாவில் காணப்படும் நிதி நிறுவ




னங்கள் மற்றும் நிதியைக் கையாளாத ஏனைய நிறுவனங்களுக்கு பணச் சலவையிலும் பயங்கரவாதத்துக்கு நிதி சென்றடைவதிலும் காணப்படும் ஆபத்தான அம்சங்களில் போதிய தெளிவில்லை என்பதை பாரிஸ் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

சீனாவின் மிகப்பெரும் அரச வங்கியான சீன கைத்தொழில் மற்றும் வர்த்தக வங்கி மீது கனடா அபராதம் விதித்திருந்தது. கனடாவின் குற்றம் மற்றும் பயங்கரவாதத்துக்கான நிதிச் சட்டத்தை மீறியதற்காகவே அபராதம் விதிக்கப்பட்டது.

சீன விவசாய வங்கி மீது நியூயோர்க் வங்கிக் கண்காணிப்புச் சபை 2016ம் ஆண்டில் 215 மில்லியன் அமெரிக்க டொலர்களை அபராதமாக விதித்திருந்தது. அந்நாட்டு வங்கிச் சட்டங்களை மீறியதாலேயே அபராதம் விதிக்கப்பட்டது. 2007 2010 காலப் பகுதியில் சீனா வங்கி தனது கிளைகளின் ஊடாக இரண்டு மில்லியனுக்கும் அதிகமான யூரோவை நிதிச் சலவை செய்து அதைச் சீன கிரிமினல்கள் பயன்படுத்தும் வகையில் சீனாவுக்கு அனுப்பி வைத்ததாக மிலான் நகரில் இயங்கும் இவ் வங்கி மீது 2015 இல் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டது.


## INVITATION FOR BIDS (IFB)

## PACHCHILLAIPALLI PRADESHIYA SABHA, KILLINOCHCHI DISTRICT

### LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP) - LOAN NUMBER : P163305

01. The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank (WB) towards the cost of Local Development Support Project (LDSP) and intends to apply part of the proceeds of this loan to payments under the Contract for **Construction of Market Building at Pallai Town (Stage I).**

02. The Chairman, Local Authority Procurement Committee (LAPC) on behalf of the Pachchillaipalli Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for **Construction of Market Building at Pallai Town (Stage I)** as described below.

| No. | Contract No. | Contract Name | Tentative Estimated Cost (Rs. Mn) | Required Minimum CIDA Grade | Contract Period |
|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/KN/PAPS/2022/01 | Construction of Market Building at Pallai Town (Stage I) | 9.83 | C7 | 91 Days |

03. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.

04. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty of **Building Construction** for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).

05. Qualification requirements are indicated in Section 5 (Bidding Data and Contract Data) of the Bidding document.

06. Interested bidders may obtain further information from **Chairman, Pachchillaipalli Pradeshiya Sabha, A9 Road, Pallai,** (T.P No: 0212050037, Fax No: 0212050036) and inspect the bidding documents at the address given below from **17th February 2022** until **17th March 2022** between **09:00 Hrs and 15:00 Hrs** on normal working days.

07. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Chairman, Pachchillaipalli Pradeshiya Sabha, A9 Road, Pallai from 17th February 2022** until **17th March 2022** between **09:00 Hrs and 15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Two Thousand Rupees (Rs.2,000.00).** The method of payment will be by cash.

08. Bids shall be delivered in duplicate to the address below at **Chairman, Local Authority Procurement Committee, Pachchillaipalli Pradeshiya Sabha, A9 Road, Pallai** at or before **14.00 Hrs on 18th March 2022.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

09. Bids shall be valid up to **03rd June 2022.** All bids shall be accompanied by a Bid Security of Rs.100,000.00. Bid Security shall be valid up to **01st July 2022.**

10. A pre-bid meeting will be held at 11.00 Hrs on **10th March 2022** at **Pachchillaipalli Pradeshiya Sabha, A9 Road, Pallai.**

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC)**
**Pachchillaipalli Pradeshiya Sabha,**
**A9 Road,**
**Pallai.**



## பெறுகை அறிவித்தல்

### வட மத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்

### வடிகட்டி/ உராய்வு நீக்கி பொருட்கள்/ திரவ வகைகள் மற்றும் ஏனைய பொருட்களை கொள்வனவு செய்தல்

வட மத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் கீழ்க்காணும் பொருட்களை வழங்கும் முகமாக வட மத்திய மாகாண சுகாதார சேவை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரான என்னால் 2022.03.09 மு.ப. 11.00 வரை தகைமையான வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்.

| லொட் இல. | தொடர் இலக்கம் | தேவைப்படும உபகரணம் | கேள்விப் பத்திர கட்டணம் (ரூ) | 105 நாட்கள் செல்லுபடியாகும். கேள்விப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| A | PDHS/F4/2022/P/02/01 | நிசான் வாகனத்திற்கானவடிகட்டி | 1000.00 | 20,000.00 |
| B | PDHS/F4/2022/P/02/02 | மிட்சுபிஷி வாகனத்திற்கான வடிகட்டி | 1000.00 | 20,000.00 |
| C | PDHS/F4/2022/P/02/03 | டொயோட்டா வாகனத்திற்கான வடிகட்டி | 1000.00 | 20,000.00 |
| D | PDHS/F4/2022/P/02/04 | இசுசூ, போர்ட் வாகனத்திற்கான வடிகட்டி | 1000.00 | 20,000.00 |
| E | PDHS/F4/2022/P/02/05 | உராய்வு நீக்கி பொருட்கள் | 1000.00 | 20,000.00 |
| F | PDHS/F4/2022/P/02/06 | திரவவகைகள் மற்றும் ஏனைய பொருட்கள் - ஹைபவர் வாகன கழுவும் திரவம், எயார்பிரஷ்னர், கிளாஸ்கிளீனர், டேஷ்போர்ட் பொலிஷ், ரேடியேட்டர் கூலன்ட், பொலிஷின் குளோத், கொட்டன் வேஸ்ட், சேப்டி கோகல்ஸ், சேப்டி கம்பூட்ஸ், சேப்டி ஹெல்மட், ½" ரைவ் இம்பெக்ட் ரென்ச் | 1000.00 | 15,000.00 |

02. அங்கீகரிக்கப்பட்ட வியாபார பெயர் பதிவுச் சான்றிதழ் கொண்ட உள்ளூர் முகவர் நிறுவனங்கள் இக் கேள்விக்கு முன்வருவதற்கு தகைமை பெறுவர். இக் கொள்வனவிற்கு எதிர்பார்க்கப்படும் பொருட்கள் சம்பந்தமான முழுமையான விபரங்கள் மற்றும் மாதிரிகள் வட மத்திய மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல. 025-2050718/ 025-2223790)
03. மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர கட்டணத்தை செலுத்தி மற்றும் வியாபார பெயர் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்த பின்பு பெறுகை ஆவணங்களை அநுராதபுரம், வடமத்திய மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் 2022.02.17 முதல் 2022.03.09 வரை அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00) பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன், கட்டணங்கள் இன்றியே பெறுகை ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. கேள்வி நிபந்தனைகளுக்கு அமைவாக முறையாக பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களை 2022.03.10 மு.ப. 11.00 இற்கு முன் கிடைக்குமாறு, தலைவர், மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைத் திணைக்களம், பண்டாரநாயக்க மாவத்த, அநுராதபுரம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் கையோடு கொண்டுவந்து உள்ளிடலாம்.
